
GOKULAM
செப்டம்பர் 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!
அசத்தும் அர்ஜுன்!
அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவு

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1201


1202


1203


1204


1205


1206


1207


1208


1209


1210


1211


1212


1213


1214


1215


1216


1217


1218


1219


1220


1221


1222


1223


1224


1225

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி

செப்டெம்பர் 2009 மலர் : 27 இதழ் : 8

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



பயம் வேண்டாம்!

மெக்சிகோவில் தோன்றிய புதிய வில்லன் உலகம் முழுவதும் மனிதர்களுடன் போரிட ஆரம்பித்துவிட்டான்; இந்தியாவிலும் ஊடுருவி தமிழ்நாட்டிலும் கால் பதித்து விட்டான். அந்த வில்லன் பெயர் பன்றிக் காய்ச்சல். 'பன்றிக் காய்ச்சல்' பரவுவதைவிட, அது பற்றிய பயம் மிக அதிக மாகப் பரவி விட்டது. H1N1 என்னும் வைரஸால் பரவும் இந்த நோய், ஆபத்தானது என்று சொல்லப்படுகிறது. அதேசமயம், 'இந்த நோயை குணப்படுத்த முடியும்; வராமலும் தவிர்க்க முடியும்' என்கிறார்கள்.


- புத்தம் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்பது. இதனால் உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது.
- அதேபோன்று உணவில் பூண்டு சேர்த்துக் கொள்வதாலும், நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகிறது.

தவிர பன்றிக் காய்ச்சல் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளுக்கு செல்வதைத் தவிர்த்தல்; அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் பேசும்போது முகக் கவசம் அணிதல்; இருமல் மற்றும் தும்மலின்போது கைகளால் மூடியவாறு இருமி உடனே கைகழுவுதல்; காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி... போன்றவை தொடர்ந்தால், உடனே மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது... என்று கவனமாகச் செயல்பட்டாலே போதும். நோயைத் தவிர்க்கவும் முடியும் என்றும் மருத்துவர்கள் கூறுகிறார்கள். எனவே, எச்சரிக்கை போதும்; பயம் வேண்டாமே!



அன்புடன்,

கோகு



சுகுணா

புலவர் போட்ட

புலவர் தனுஷ்கோடி தன்னுடைய இல்லத்தின் திண்ணையில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தார். அப்போது அவரைத் தேடி வந்தார் அவரது உறவினர்.

''வணக்கம் புலவரே... என்ன ஓய்வு பெற்ற பின்னாலயும் என்னத்தை தேடித் தேடிப் படிச்சு சிரிக்கிறீங்க? புதையலா கிடைச்சுருக்கு?''

புலவர் அவரைப் பார்த்து புன்னகையுடன் சொன்னார்:

''ஒரு வகைல உண்மைதான். இப்ப நான் ஒரு விடுகதை சொல்கிறேன். பதில் சொல்றீங்களா?''

''ம்... சொல்லுங்களேன்... பார்ப்போம்.''

''நாலு எழுத்துள்ள சொல் அது. முதல் பாதி இல்லேன்னா, இருட்

முற்பாதி போய்விட்டால் இருட்டே ஆகும்;
முன்னெழுத்தில் லாவிட்டால் பெண்ணே ஆகும்;
பிற்பாதி போய்விட்டால் ஏவல் சொல்லாம்;
பிற்பாதி யுடன் முன்னெழுத்து இருந்தால் மேகம்;
சொற்பாகக் கடைதலை சின்மிருகத் தீனி;
தொடர் இரண்டாம் எழுத்து மாதத்து ஒன்றாகும்;
பொற்பாற் திண்புய முத்துசாமி மன்னா
பகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே,

\- அழகிய சொக்கநாதம் பிள்ளை

டுன்னு பொருள் வரும்.''

''இருட்டே நாலு எழுத்துள்ள சொல்தானே. அப்புறம்?''

''மறுபாதி இல்லேன்னா, வேலையைக் குறிக்கிற ஏவல் சொல்.''

''என்னங்க இது, ஏவல் சேவல்னு?''

''பொறுமையாக் கேளுங்க. இரண்டாவது எழுத்தை மட்டும் விட்டுட்டு பார்த்தா, பயங்கரமான காத்து.''

''அப்படின்னா சூறாவளி! ஆனா நாலு எழுத்து வருதே?''

''முதல் எழுத்தை தவிர்த்துட்டா, 'பெண்' என்று அர்த்தம்!''

விடுகதை!

''மூன்று எழுத்துல! பெண்'. அப்ப 'மங்கை!''

''இருங்க... முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் சேர்த்தா, மாட்டுக்கு தீனி.''

''தவிடு, இல்லியே, மூன்று எழுத்துல்ல வருது?''

''சரி; இரண்டாவது எழுத்தை மட்டும் பார்த்தா, அது தமிழ் மாசம்!''

''ம்... தெரிஞ்சிடுச்சு, தை!''

''இது சரி; வார்த்தை என்னன்னு சொல்லலியே...''

புலவர் கேட்டவுடன் உறவினர் சொன்னார்; ''ஐயா, தெரியாம கேட்டுட்டேன். நீங்களே சொல்லிடுங்க.''

அதைக் கேட்ட புலவர் புன்னகைத்தபடியே சொன்னார்: ''நீங்க சொன்ன வார்த்தைதான். விடை: புதையல்! அழகிய சொக்கநாதம் பிள்ளை என்கிற புலவர் எழுதிய பாடல் இது!''

கல்கி
கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப்



ஆண்டுதோறும் நடைபெறும் அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் இந்த ஆண்டும் ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்திருந்தீர்கள். உற்சாகமான உங்களின் பங்களிப்பு எங்களுக்கு பெரும் மனநிறைவைத் தந்தது. பங்கேற்ற அனைவருக்கும் எங்களுடைய பாராட்டுகளும், வாழ்த்துகளும்!

வந்திருந்த சிறு கதைகளில் எட்டு கதைகள் இறுதிச் சுற்றுவரை வந்தன. அவற்றில் இருந்து முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாம் பரிசுக்குரிய கதைகளை தேர்வு செய்யும் பெரும்பணியை மனமுவந்து செய்தார் திருமிகு. கூத்தபிரான்.

சென்னை, அகில இந்திய வானொலி நிலையத்தில் பணியாற்றிய திரு.கூத்தபிரான், 'ரேடியோ அண்ணா' என்ற பெயரில் குழந்தைகளுக்கான கதைகள் சொல்லிப் புகழ் பெற்றவர். அவர் தேர்வு செய்தது இன்னமும் பொருத்தமானது.

ஒவ்வொரு கதையையும் தேர்வு செய்த காரணத்தை ரத்தினச் சுருக்கமாக இரண்டு மூன்று வரிகளில் எழுதியுள்ளார் அவர். அந்தக் குறிப்புகளுடன் தேர்வான கதைகள் பற்றிய விவரம் வருமாறு:



* *நம்பும்படியாகவும், இயற்கையான அண்ணன் தம்பி பாசம், முயற்சிக்கு உதவும் பாங்கு, அறிவு பூர்வ விளக்கம் கொண்ட கதை 'வானவில்', அதனாலேயே முதல் பரிசுக்கு உரியதாகிறது.*

முதல் பரிசுக் கதை: **வானவில்**

எழுதியவர்: **மு.அருண்குமார்,**
உ.எண்.670, ஆர்.வி.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஒசூர்.

போட்டி முடிவு - 2009

✱ கடும் முயற்சிக்கு பலன் உண்டு; சந்தோஷுக்கு அவன் பெரியப்பா மகன் அரவிந்த் சொல்லும் அறிவுபூர்வமான அறிவுரை, இரண்டாம் பரிசை பெறச் செய்கிறது.

இரண்டாம் பரிசுக்கதை: **நிழல் சொல்லும் பாடம்!**

எழுதியவர்: **யாழினி அன்புமணி,** பத்தாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம் மெட்ரிக் பள்ளி, ஈரோடு

✱ கூத்தபிரான்



✱ அழகான சிறிய கதை, சொன்ன விதத்தாலும், தெளிவான நடையாலும் பளிச்சிடுகிறது; மூன்றாம் பரிசைப் பெறுகிறது.

கதை: **அவள் பெயர் அபி!**

எழுதியவர்: **ஏ.ரகுபதி,** பத்தாம் வகுப்பு, 16/23, சேப்பெருமாள் தெரு, செஞ்சி

✱ தன் தந்தை ஒரு பயங்கரவாதியோடு தொடர்பு கொண்டவர் என்பதை அறிந்த மகன், கமிஷனருக்கு கடிதம் எழுதுவது, சிறந்த சமூகப் பார்வை! அந்த வகையில் தேர்வு பெற்றுள்ள கதை இது.

கதை: **கமிஷனருக்கு ஒரு கடிதம்**

எழுதியவர்: **கே.பரத்,**

பத்தாம் வகுப்பு, ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஓசூர்



வெற்றி பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகள்!
பங்கேற்ற அனைவருக்கும் மீண்டும் எங்கள் பாராட்டுகள்!





அசத்தும்

* அர்ஜுன்

நம்புவது கொஞ்சம் கஷ்டம்தான். ஒன்பதாம் வகுப்பில் பயிலும் ஒரு மாணவனின் கரங்களில் வசப்பட்டா, வண்ணங்கள், இந்த ஓவிய வடிவம் பெற்றிருக்கின்றன!

ஆம்; உண்மை அதுதான்!

ஆறு வயதில் தூரிகை பிடிக்க ஆரம்பித்த அர்ஜுனின் திறமை, பதினான்கு வயதில் அசரடிக்கிறது.

மயிலை, விந்யாஸா ஆர்ட் கேலரியில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியைக் கண்ட பலரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அத்தனை ஓவியங்களும் கேன்வாஸ் பெயிண்டிங். மிக மிக அழகான இயற்கைக் காட்சிகள் அந்த ஓவியங்களில் உட்பொருளாகக் கையாளப்பட்டிருந்தன.

வண்ணமயமான இயற்கையின் பல்வேறு நிலைகளை அவை படம் பிடித்தன. புல்வெளிகள், மலர்த்தோட்டங்கள், சமவெளிகள், ஓடைக் கரைகள்... என்று ஒவ்வொரு ஓவியத்திலும் அர்ஜுனின் கவனிப்பும், அதை வெளிப்படுத்தியதில் முனைப்பும், தேர்ச்சியும் தென்பட்டன.

''அதென்ன இயற்கைக் காட்சிகளையே களமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டால், ஆச்சர்யமான பதில் வருகிறது அர்ஜுனிடம்!

''பொதுவில், நாம் இயற்கையின் அற்புதங்களை ரசிக்கத் தெரியாத நடைமுறை வாழ்வில் இருக்கிறோம். மனிதன் எவ்வளவு கண்டுபிடிப்புகளைச் செய்தாலும், எவ்வளவு பொருட்களை உருவாக்கினாலும், இயற்கையை ஒட்டியே வாழ வேண்டும்; இயற்கையோடு இணைந்ததாக, இயற்கையை மாசுபடுத்தாததாக, இயற்கைக்கு வலுவூட்டுவதாக புதிய கண்டுபிடிப்புகள் அமைய வேண்டும். ஏனென்றால் இயற்கையை என்றுமே வெல்ல முடியாது. அதுதான் இந்த ஓவியங்களுக்கான உட்பொருள்!''

மிகத் தெளிவாகப் பேசும் அர்ஜுனின், இந்த ஓவியக் கண்காட்சியைத் துவங்கி வைத்தவர் சென்னை, அரசினர் கவின் கலைக் கல்லூரியின் முதல்வரான



அர்ஜூன்!

மனோகர் நடராஜன். இந்த ஓவியங்கள் பற்றி அவர் என்ன சொல்கிறார்?

''காட்சிகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, அதை வண்ணங்களின் மூலம் வெளிப்படுத்தும் திறன் அர்ஜூனிடம் பளிச்சிடுகிறது. இப்படியே தொடர்ந்தால், சிறந்த ஓவியனாக அர்ஜூன் பிரகாசிப்பான். இப்போதே இவனுடைய தனித்துவமான பாணி தெரிய ஆரம்பித்துவிட்டது. அவனுடைய landscape-ல் - அவன் வரையும் கோடுகளில், பிரபல ஓவியர்களின் ஓவியவீச்சு தென்படுவதுதான் இவனின் சிறப்பு.

பலர் அர்ஜூனுக்கு சொல்லிக் கொடுத்தாலும், தனக்கானது இது என்று எடுத்துக் கொண்டு கையாளும் தன்மையில் அர்ஜூன் வெற்றி பெற்றுள்ளான்'' என்கிறார், முதல்வர் மனோகர். ○

* மனோகர்



- ஆகாஷ்





'ஏய், சும்மா கதை அளக்காதே' என்று தன் நண்பரைக் கேலி செய்தார் எரடாஸ்தனிஸ்.

'இல்லை எரடாஸ்தனிஸ். நான் நிஜமாத்தான் சொல்றேன்' என்ற அந்த நண்பர், ''நீ வேணும்னா இந்தப் புத்தகத்தைப் படிச்சுப் பாரேன்''. ஒரு புத்தகத்தைக் கொடுத்தார்.

படிக்கப் படிக்க எரடாஸ்தனிஸுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை, அப்படி அந்தப் புத்தகத்தில் என்னதான் எழுதியிருந்தது?

எரடாஸ்தனிஸின் சொந்த ஊர் அலெக்ஸாண்ட்ரியா. அங்கிருந்து சுமார் 800 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இன்னோர் ஊர், ஸயீன். அங்கே ஒரு குறிப்பிட்ட நாளில், மதியம் சரியாக பன்னிரண்டு மணிக்கு ஒரு மிகப் பெரிய அதிசயம் நடக்கிறதாம்.

என்ன அதிசயம்?

ஸயீனில், அந்தக் குறிப்பிட்ட நாளில் மட்டும், நண்பகல் பன்னிரண்டு மணிக்கு நேராக உள்ள எந்தப் பொருளின் நிழலும் கீழே விழாதாம். அப்படியே மறைந்து போய்விடுமாம்.

அதுமட்டுமில்லை; அதே பன்னிரண்டு மணிக்கு அந்த ஊரில் உள்ள ஒரு கிணற்றை எட்டிப்பார்த்தால், தண்ணீருக்கு நடுவே சூரியனின் பிம்பம் பளிச்சென்று தெரியுமாம். இப்படி ஓர் அதிசயக் காட்சியை எரடாஸ்தனிஸ் அதுவரை கேள்விப்பட்டதும் இல்லை; பார்த்ததும் இல்லை. அவருக்கு இந்த மர்மத்தின் காரணத்தைக் கண்டுபிடித்து விடவேண்டும் என்கிற துடிப்பு. நேராக ஸயீனுக்குப் புறப்பட்டுவிட்டார்.

எரடாஸ்தனிஸ் வாழ்ந்த காலத்தில் (கிட்டத்தட்ட 2200 ஆண்டுகளுக்கு முன்னால்) இன்றளவுக்கு போக்குவரத்து வசதிகள் இல்லை. யாரும் நினைத்த நேரத்தில் வெளியூர் போய்விடமுடியாது. ஆகவே, எரடாஸ்தனிஸ் ரொம்பக் கஷ்டப்பட்டுதான் ஸயீன் சென்று சேர முடிந்தது.

ஸயீன் சென்று பார்த்தபோது, அந்தப் புத்தகத்தில் படித்தவை அனைத்தும்

காணாமல்

உண்மை என்று அவருக்குப் புரிந்தது. அந்தக் குறிப்பிட்ட நாளில், மதியம் பன்னிரண்டு மணிக்கு, அங்கே உள்ள எந்தப் பொருளும் நிழல் தரவில்லை. அதே நேரம் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தால் சூரியன் தெளிவாகத் தெரிந்தது.

அப்படியானால் இந்த நேரத்தில், சூரியன் ஸயீனுக்கு நேர் மேலே உச்சியில் வந்திருக்கிறது. அதனால்தான் நிழல் மறைந்து போய்விட்டது.

ஆனால், அதே நாளில், அதே நேரத்தில், அலெக்ஸாண்ட்ரியாவில் இந்த அதிசயம் நடக்கவில்லையே. இது ஏன்? எரடாஸ்தனிஸுக்குக் குழப்பம்.

அப்போது, உலகம் தட்டையாக இருக்கிறது என்றுதான் எல்லோரும் நினைத்துக்கொண்டிருந்தார்கள். அதன்படி பார்த்தால், ஸயீனில் விழுகிற அதே அளவு நிழல்தான் அலெக்ஸாண்ட்ரியாவிலும் விழவேண்டும். குழப்புகிறதா? ஒரு சிறிய பரிசோதனை செய்து பார்க்கலாம்.

காலை சுமார் பத்தரை மணியளவில் உங்கள் வீட்டு மொட்டை மாடிக்குச் செல்லுங்கள். அங்கே இடைவெளி விட்டு இரண்டு செங்கல்களை நிறுத்திவையுங்கள்.

இப்போது அவற்றில் நிழலைக்

போன நிழல்

என். சொக்கன்


கவனியுங்கள். அவை எவ்வளவு நீளம் என்று கவனமாக அளந்து பாருங்கள். இரண்டு நிழல்களும் ஒரே நீளம்தான் இருக்கும்.

ஒரு மணி நேரம் கழித்து, மீண்டும் இரண்டு செங்கல்களின் நிழல்களைப் பாருங்கள். அவை முன்பைவிடக் கொஞ்சம் நீளம் குறைந்து காணப்படும். ஆனால் இப்போதும், இரண்டு நிழல்களும் சமமாக, ஒரே நீளத்தில் இருப்பதைப் பார்க்கலாம்.

இதற்குக் காரணம், உங்கள் வீட்டு மொட்டை மாடி தட்டை(Flat)யாக இருக்கிறது. ஆகவே இரண்டு செங்கல்களின் நிழலும் சரிசமமாக விழுகிறது.

இப்போது, இந்த உலகத்தை ஒரு பெரிய மொட்டை மாடியாகக் கற்பனை செய்து பாருங்கள். ஸயீனில் உள்ள செங்கலின் நிழலும், 800 கிலோ மீட்டர் தள்ளி அலெக்ஸாண்ட்ரியாவில் உள்ள இன்னொரு செங்கலின் நிழலும் சரிசமமாக இருக்க வேண்டும்தானே?

ஆனால் உண்மையில், ஸயீனில் நிழலே விழாதபோது, அலெக்ஸாண்ட்ரியாவில் நிழல் விழுகிறது. அது ஏன் என்று,



தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார் எரடாஸ்தனிஸ்.


சூரியனில் இருந்து வருகிற ஒளிக் கதிர்கள், பூமியின் மீது ஒரேமாதிரி தான் விழுகின்றன. ஆனால் இங்கே விழும் நிழல் வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறுவிதமாக இருக்கிறது என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கமுடியும் - பூமி தட்டையாக இல்லை; வளைந்து இருக்கிறது. அதாவது, உருண்டையாக.

இப்படி யோசித்த எரடாஸ்தனிஸ், அலெக்ஸாண்ட்ரியாவிலும் ஸயீனிலும் உள்ள நிழலின் நீளங்களை அளந்து பார்த்து, இவை இரண்டுக்கும் இடையே உள்ள வளைவுக் கோணத்தையும் கண்டுபிடித்துவிட்டார் - ஏழு டிகிரி.

உங்களுக்கே தெரியும்; ஓர் உருண்டைக் கோளம் என்பது, மொத்தம் 360 டிகிரிகளைக் கொண்டது. அதில் ஏழு டிகிரி என்பது சுமார் ஐம்பதில் ஒரு பங்கு.

அப்படியானால், இதேபோல் ஏழு ஏழு டிகிரியாக ஐம்பது ஊர்களைக் கண்டுபிடித்தால், ஒட்டுமொத்த பூமியையும் சுற்றி வந்துவிடலாம். இல்லையா?

அலெக்ஸாண்ட்ரியாவுக்கும் ஸயீனுக்கும் இடையில் உள்ள தூரம் 800 கிலோ மீட்டர். அப்படியானால், பூமியின் சுற்றளவு 800 X 50 = சுமார் 40000 கிலோ மீட்டர்கள் என்று கண்டுபிடித்தார் எரடாஸ்தனிஸ்.



முக்கியமான விஷயம், இந்தக் கண்டுபிடிப்புகளுக்காக அவர் பெரிய ஆராய்ச்சி சாலை வைத்துப் பல லட்சம் ரூபாய் செலவழிக்கவில்லை. அந்தக் காலத்தில் இதுபோன்ற கணக்குகளைச் செய்வதற்கான நவீன வசதிகள் எவையும் இல்லை.

ஆனால், எரடாஸ்தனிஸுக்கு நிறைய ஆர்வம் இருந்தது. காரணத்தைத் தேடுகிற முனைப்பும், உழைப்பும் இருந்தது. தன்னுடைய மூளையை மட்டுமே மூலதனமாக வைத்து, ஒரு மிகப் பெரிய புவியியல் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டார் அவர்.

இதில் பெரிய ஆச்சர்யம், எந்த நவீனக் கருவிகளையும் பயன்படுத்தாமல் எரடாஸ்தனிஸ் கண்டுபிடித்த பூமியின் சுற்றளவு, கிட்டத்தட்ட சரியானதுதான்.

பின்னாள்களில் துல்லியமான சாதனங்களின் மூலம் பூமியை அளந்துபார்த்த நிபுணர்கள், எரடாஸ்தனிஸின் அந்தக் காலக் கணக்கைப் பார்த்து அசந்துபோனார்கள்.

அறிவியல் என்பது, முழுக்க முழுக்க ஆர்வம் சார்ந்தது. அந்த ஆர்வமும், முனைப்பும் இருந்துவிட்டால் போதும், வேறு எதுவும் குறுக்கே வர முடியாது! ○

டியர் குட்டீஸ் ...

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணை குறிப்பிட மறக்காதீர்கள்.

● ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

● பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32





'நானோ' அறுவைச் சிகிச்சை

'நானோ துகள் களைப் பயன்படுத்தி புற்றுநோய்க்கான செல் களை அழிக்க முடியும்' என விஞ் ஞானிகள் நிரூபித்துள்ளனர். இந்த சிகிச்சையில் புற்றுநோய்க்கான செல் கள் மட்டுமே அழிக்கப்படுகின்றன; ஆரோக்கியமான செல்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. "எலி களுக்கு இந்த சிகிச்சை வெற்றி கரமாகச் செயல்படுத்திப் பார்க்கப் பட்டுள்ளது. மனிதர்களுக்கு இதை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்ட இன்னும் இரண்டு ஆண் டுகள் தேவைப்படும்'' என இங் கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்

கைவீசம்மா, கைவீசு!

நடக்கும்போது கைகளை வீசிக் கொண்டு நடப்பதால் உடலில் உள்ள சக்தி சேமிக்கப்படுகிறது; கைகளை அசைக்காமல் நடந்தால் அதிக மான சக்தி செலவாகின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள் ளனர். 'கைகளை அசைக்காமல் நடந் தால், நமக்கும் பூமிக்கும் உள்ள தொடர்பு 63 சதவீதம்வரை அதிக மாகின்றதாம். இதனால் அதிகப்படியான சக்தி செலவாகின்றது. கைகளை வீசி நடப்பதால் கால்களில் உள்ள தசைகளில் இருந்து செலவாகும் சக்தியின் அளவும் பெருமளவில் குறைக்கப்படுகிறது என்கிறார் கள் ஆராய்ச்சியாளர்கள். இந்த ஆராய்ச்சிக் கட்டுரையை ராயல் சொசைட்டி என்னும் அமைப்பு வெளியிட்டுள்ளது. அப்படின்னா... கை வீசம்மா, கை வீசு! கடைக்குப் போகலாம் கை வீசு!



டர் ஆண்ட்ரூஸ் ஹாட்சிலின் தெரிவித்துள்ளார்.

பறக்கும் ரோபோ வெளவால்:

வெளவால் பறப்பதில் ஆச்சர்யமில்லை; ஆனால், அதேபோல ஒரு






ரோபோவை தயாரித்து பறக்க வைத்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். வெறும் ஆறு கிராம் எடை கொண்ட இந்த வெளவால் ரோபோவை, 'நுண்ணிய பறக்கும் வாகனங்கள்' என்னும் அடிப்படையில் தயாரித்துள்ளனர். வழக்கமாகப் போர்க் காலங்களில் பெரிய விமானங்கள் அல்லது ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுகின்றன. ஏனென்றால் அவற்றின் பெரிய வடிவம்தான் காரணமாக அமைகின்றது. இந்தப் பறக்கும் வெளவால் ரோபோவில் சிறிய கேமராவைப் பொருத்தி எதிரி நாட்டு போர் நிலைகளைக் கண்காணிக்க முடியும். வடக்கு கரோலினா மாநிலப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். 'உண்மையான வெளவாலின் உடற்கூறு மாதிரியை வைத்தே இந்த ரோபோ வெளவாலை உருவாக்கியுள்ளோம்'' என்கிறார் இதில் பணியாற்றுகின்ற டாக்டர் ஸ்டீபன் சீலிகெகே.

வாலால் பேசும் டால்ஃபின்கள்:

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 'பேராசிரியர் டாக்டர் 'ரமான் பெரரர் ஐ கான்கோ'வும், பிரிட்டனைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் 'டேவிட் லூசாயு'வும் இணைந்து டால்ஃபின்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டனர். ஆராய்ச்சியின் முடிவில் வாலில் அடிப்பது, ஒன்றுக்கொன்று வாலால் தட்டுவது, பக்கவாட்டில் தட்டுவது, ஒருபுறமாய்க் குதிப்பது எனப் பல்வேறு நிலைகளில் வாலையே அதிகமாக டால்ஃபின்கள் பயன்படுத்துகின்றன எனக் கூறுகின்றனர். ''டால்ஃபின்கள் எழுப்புகின்ற மெல்லிய ஓசைகள், விசில் சத்தங்கள் இவை தவிர 30 விதமான உடல் அசைவுகளும் உள்ளன. இவை மனிதன் பேசும் சொற்களைப் போன்றவை'' என்கிறார் டாக்டர் ரமான் பெரரர் ஐ கான்கோ.

முனைவர். ஆசுரா

(ரே)நாய்க்கு



நாய் நன்றியுள்ள பிராணி. மற்ற எல்லா விலங்குகளை விடவும் மனிதனுக்கு உற்ற தோழனாக இருப்பதும், அதிக நெருக்கமாகப் பழகுவதும் நாய் தான். ஆனால், இது தெருநாய்களுக்குப் பொருந்தாது.

காரணம், தெருநாய் கடித்தால், 'ரேபீஸ்' (Rabies) என்னும் 'வெறி நோய்' வரும். அது உயிருக்கே உலை வைக்கும் ஆபத்து நிறைந்தது. உலகில் வெறிநாய்க்கடியால் இறப்பவர்களில் 80 சதவீதம் பேர் இந்தியர்கள் என்று கூறுகிறது உலக சுகாதார அமைப்பு. இன்னும் புள்ளிவிவரப்படி சொன்னால், ஆண்டுதோறும் இந்தியாவில் மட்டும் 20,000க்கும் மேற்பட்டோர் வெறிநோய் வந்து இறக்கின்றனர்.

எது வெறிநோய்?

'ரேபீஸ்' எனும் கொடிய வைரஸ் கிருமிகள் காரணமாக இந்த நோய் வருகிறது. இந்த வைரஸ்கள் தெரு நாயின் உமிழ்நீரில் வசிக்கும். வெறி நோயுள்ள தெருநாய்கள் எதிரில் வருபவர்கள் அனைவரையும் கடிக்கும். அப்படி கடிபட்ட நபருக்கு, வெறி நோய் வந்து விடும். எப்படி? நாயின் உமிழ்நீரில் உள்ள வைரஸ்கள் மனித காயத்தின் வழியாக உடலுக்குள் புகுந்து, தசைகளில் வளரும். பின்பு, நரம்புகள் வழியாகவும் முதுகுத்தண்டு வடம் வழியாகவும் மூளைக்குச் செல்லும். சில நாள்களில் மூளைத் திசுக்களை முழுவதுமாக அழித்துவிடும். இதன் விளைவால் வெறி நோய் உண்டாகும்.

அறிகுறிகள் என்ன?

இந்த நோயாளிகள் தண்ணீரைக் கண்டாலே பயந்து அலறுவார்கள். இது தான் இந்த நோய்க்கு முக்கிய அறிகுறி. இவர்களுக்குத் தொண்டைச் சதைகள் சுருங்கிவிடுவதால் தண்ணீர் குடிக்கவோ, உணவு சாப்பிடவோ முடியாது. இதனால் உயிர் போவது போன்ற உணர்வு உண்டாகும். இதற்குப் பயந்து கொண்டு தண்ணீர் குடிக்க மாட்டார்கள். இதற்குத் 'தண்ணீர் பயம்' (Hydrophobia) என்று பெயர்.

அடுத்து, எந்நேரமும் அமைதியின்றி காணப்படுவார்கள். திடீர் திடீரென்று எதையாவது பார்த்து ஓட முயல்வதும், அடுத்தவர்களைப் பார்த்து நாய்போல் கத்துவதும் கடிக்க வருவதுமாக இருப்பார்கள். சுவாசிக்க சிரமப்படுவார்கள். வலிப்பு வரும். இதற்கு உரிய நேரத்தில்

தடுப்பூசியும் முறையான மருத்துவச் சிகிச்சையும் பெறாவிட்டால் உயிரைக் குடித்துவிடும். அவ்வளவு ஆபத்து இந்த நோய்க்கு உண்டு.

நோய் வரும் காலம்:

நாய் கடித்த இடத்தைப் பொறுத்து நோய் வரும் காலம் அமையும். நாய் தலையில் கடித்தால் கிருமிகள் மூளைக்கு உடனே பரவிவிடும். அதனால்தான் முகத்திலும் தலையிலும் நாய் கடித்தால் பத்து நாள்களில் வெறிநோய் வந்துவிடுகிறது. அதுபோல், கைகளில் கடித்தால் நாற்பது நாளில் நோய் வரும். காலில் கடித்தால் எண்பது நாளில் நோய் வரும்.

உஷ்!

மருந்து இல்லை:

உலகில் எய்ட்ஸ் நோய்க்குக்கூட மருந்துண்டு. ஆனால், 'வெறிநோய் ஒன்றுக்குத்தான் நோய் வந்தபிறகு மருந்தில்லை' என்று அலோபதி மருத்துவம் ஆணித்தரமாகக் கூறுகிறது. அதேநேரத்தில் நாய்கடித்த நபர் சற்று உஷாராக இருந்தாரென்றால், இந்த நோயைத் தடுப்பதும் எளிது.

என்ன செய்ய வேண்டும்?

நாய் கடித்தவுடன், கடிபட்ட இடத்தை உடனே சோப்பு நீரால் பல முறை நன்கு கழுவ வேண்டும். வேகமாக விழுகின்ற குழாய்த் தண்ணீரில் காயத்தைக் கழுவுவது இன்னும் நல்லது.

காயம் ஆழமாக இருந்தால் காயத்தை நன்கு விலக்கிச் சுத்தப்படுத்த வேண்டும்.

காயத்தின் மீது டெட்டால் அல்லது ஸ்பிரிட் தடவ வேண்டும்.

டாக்டர் பக்கம்

என்ன செய்யக் கூடாது?


காயத்திற்குக் கட்டுப் போடக் கூடாது. ஆழமான காயமென்றாலும் தையல் போட்டு காயத்தை மூடக்கூடாது.

நாய் கடித்த இடத்தில் சுண்ணாம்பு, சந்தனம், சாம்பல், பச்சிலைச்சாறு போன்றவற்றைத் தடவக்கூடாது. அப்படித் தடவினால் கிருமிகள் உடலைவிட்டு வெளியேறுவது தடைபடும்.

தடுப்பூசி முக்கியம்!

நாய் கடித்துவிட்டால் உடனே தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். சாதாரண நாய் கடித்தால் ஒரு டெட்டனஸ் தடுப்பூசி போதும். கடித்தது வெறிநாயாக இருந்தால், கடித்த பத்து நாளில் அது இறந்துவிடும். அப்போது 'வீரோரோப்' எனும் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள

டாக்டர் கு.கணேசன்



வேண்டும். அதற்காக நாய் இறப்பது வரைக் காத்திருக்கக்கூடாது. கடித்தநாளில் முதல் ஊசியும், அதன் பிறகு 3, 7, 14, 28-ம் நாள்களில் என்று மொத்தம் 5 முறை தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வெறி நோயிலிருந்து முழுவதுமாக விடுதலை கிடைக்கும். இந்தத் தடுப்பூசி இலவசமாக அரசு மருத்துவமனைகளில் கிடைக்கிறது.

யார் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் அநேகமாக நாய்க்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வர். நாய்க்கடியால் துன்பப்படுபவர்கள் பெரும்பாலும், பாதசாரிகள், குழந்தைகள், இரு சக்கர வாகன ஓட்டிகள், தெருக்களில் வியாபாரம் செய்வோர் ஆகியோர்தான். இவர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்கள் நாய் கடிப்பதற்கு முன்பே தற்காப்புத் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்வது நல்லது.

நாய்க்குத் தடுப்பூசி:

வீட்டில் நாய் வளர்ப்போர், நாய்க் குட்டிக்கு இரண்டு மாதம் முடிந்ததும் ஒரு தடுப்பூசி, மூன்று மாதம் முடிந்ததும் ஒரு தடுப்பூசி போட்டுவிட வேண்டும். அதன் பிறகு ஆண்டுக்கு ஒருமுறை இதே தடுப் பூசியை 'ஊக்குவிப்பு ஊசி' (Booster) யாகப் போட வேண்டும். முக்கியமாக, வீட்டுநாயைத் தெருநாயோடு பழகவிடக் கூடாது. அப்போதுதான் வீட்டு நாய்க்கு வெறிநோய் வராது.

அடுத்தமுறை நாயோடு விளையாடும்போது எச்சரிக்கையாக இருப்பீர்கள்தானே? ○



வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 25ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள்:

1. பாப்லோ பிகாஸோ, 2. சில்வர் கோஸ்ட், 3. கடல் கன்னி, 4.டொயோட்டோ, 5.முக்கொம்பு.

பரிசு பெறுவோர்:

1. ஏ.ஜே.கிராலிசா, தென்காசி, 2. வி. அன்வர் உசேன், கடையக்காடு, 3. ஆர்.கவினி, மங்கலம், 4.கே.தாமரைசெல்வி, தூத்துக்குடி, 5. ர.ராகவேந்திரன், மன்னங்காடு, 6. பூ.கௌசிகப்பிரியா, மேட்டுப்பாளையம், 7. நா. முத்துலெட்சுமி, மதுரை 8. தீ. இளஞ்சேரலாதன், மேலக்காயக்காடு, 9. எஸ். சிராஜ்யதயாளன், டி.கள்ளிப்பட்டி, 10. இரா.முத்துகுமார், சென்னை-10

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


பூனை



சீனாவில் உள்ள ஒரு கிராமம். அதில் வசித்த கியோமோ தம்பதிக்கு மூன்று மகன்கள். மூத்த மகன் மிங்-மிங், வயலில் அயராமல் உழைத்து, அதன் பலனாக மூட்டை - மூட்டையாக தானியங்கள் கொண்டு வந்தான்.

இரண்டாவது மகன் ஜியாங் - சென், பட்டு நெசவுத் தொழிலில் சிறந்தவன். அதனால், மக்கள் அவனைத் தேடி வந்து பட்டுத் துணியை வாங்கிச் சென்றனர்.

மூன்றாவது மகன் ஜிங்-ஜிங்கை நினைத்து தான் பெற்றோருக்குப் பெருங்கவலை. ஜிங் - ஜிங் நல்லவன்தான். ஆனால், எந்த வேலையிலும் அவனால் முழுமையாக ஈடுபட முடியவில்லை. ஒரு சுவரைப் பார்த்தால், உடனே அதில் பூனை படம் வரையத் தொடங்கி விடுவான்.

அவர்கள் வீட்டின் சுவர் முழுவதும், எங்கே பார்த்தாலும், பூனை படங்கள்தான். சின்ன பூனை, பெரிய பூனை, குட்டிப் பூனை, பிரமாண்ட பூனை என்று வரைந்து தள்ளுவதுதான் அவனுடைய ஒரே பொழுதுபோக்கு. ஜிங்-ஜிங் என்ற பெயரே மறைந்து எல்லோரும் அவனை 'பூனை சிறுவன்' என்றே அழைத்தனர்.

அதைக் கண்டு மிகவும் வருந்தினார் அவன் தந்தை. ஒருநாள், அவனை பக்கத்து ஊரில் உள்ள குருவிடம் அழைத்துச் சென்றார். ''ஐயா இவன் என் மகன். இவனை சிறந்தவனாக்க வேண்டும். நீங்கள் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. இவனை உருப்படியான மனிதனாக மாற்றித் தாருங்கள்'' என்று குருவிடம் வேண்டி, அவனை குருகுலத்தில் சேர்த்துவிட்டார்.

ஜிங்-ஜிங் வெகு உற்சாகமாய் பாடங்களைக் கற்றான். அவனுடைய பூனை வரையும்

சிறுவன்!

பழக்கமும் தொடர்ந்து வந்தது. மற்ற மாணவர்களைவிட விரைவாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தான்.

அவனுடைய திறமையைக் கண்டு வியந்த குரு, ''குழந்தாய்! நீ சமயகுருவாய் உயரும் காலம் வந்துவிட்டது. "நீ ஷிண்டோ கிராமத்துக்குச் சென்று அங்குள்ள கோயிலில் பணியாற்று. ஒரு விஷயத்தை மட்டும், மனத்தில் நிறுத்திக்



கொள்! இருட்டிய பின் எக்காரணம் கொண்டும் பெரிய இடத்தில் படுக்காதே! சிறிய இடத்தில் பூட்டிக் கொண்டு தூங்கு!'' என்று அறிவுரை கூறி அவனை அனுப்பி வைத்தார்.

குருவிடம் இருந்து விடைபெற்று, மகிழ்ச்சியுடன் அந்த ஊருக்குக் கிளம்பினான் ஜிங்-ஜிங். அங்கே போய்ச் சேர்ந்தபோது, மாலைப் பொழுதாகி விட்டது. எதிரே வந்த ஆளிடம், 'இந்த ஊர்க் கோவில் எந்தப் பக்கம் உள்ளது?'' என்று கேட்டான். "நேரே போய் வலது பக்கம் திரும்ப வேண்டும்''



ஜிங்-ஜிங் பிரமாண்டமான பூனைப் படங்களை வரைய ஆரம்பித்தான். நிற்கும் பூனை. நடக்கும் பூனை.சீறும் பூனை. குதிக்கும் பூனை. பாயும் பூனை... என்று எல்லாச் சுவர்களிலும் வரைந்து முடிக்க நன்றாக இருட்டி விட்டது.

என்று வழிகாட்டி விட்டு, ஏதோ சொல்ல வாயெடுத்தான் அவன். ஆனால், அதையெல்லாம் கேட்க அங்கே ஜிங்-ஜிங் இருந்தால்தானே!

அந்தக் கோவிலை ஒரு எலி ராட்சசன் கைப்பற்றி, அங்கே குடியிருந்தான். இரவில் அங்கு வரும் மனிதர்களைப் பிடித்து சாப்பிடுவது அவன் வழக்கம். மாலையானால், அந்தக் கோயிலுக்கு யாருமே போக மாட்டார்கள். இந்த உண்மையெல்லாம் தெரியாமல் ஜிங்-ஜிங் அந்தக் கோயிலுக்குள் நுழைந்தான். பாழடைந்து கிடந்த கோயிலைச் சுத்தப்படுத்தி விளக்கேற்றினான்.


அங்கிருந்த பெரிய சுவர்களைப் பார்த்ததும், 'ஜிங்-ஜிங்'கின் கை துறுதுறுத்தது. பக்கத்தில் கிடந்த ஏணியை எடுத்துப் போட்டு, பிரம்மாண்டமான பூனைப் படங்களை வரைய ஆரம்பித்தான். நிற்கும் பூனை, நடக்கும் பூனை, சீறும் பூனை, குதிக்கும் பூனை, பாயும் பூனை என்று... எல்லாச் சுவர்களிலும் வரைந்து முடிக்க நன்றாக இருட்டி விட்டது.

சுற்றும் முற்றும் பார்த்த ஜிங்-ஜிங்குக்கு குரு சொன்ன அறிவுரை ஞாபகம் வந்தது. ஒரு சின்ன அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டிக் கொண்டு உறங்கிப் போனான்.

நடு இரவில் ஏதோ சத்தம் கேட்டு விழித்த ஜிங்-ஜிங் மெல்ல கதவைத் திறந்து பார்த்தான். அங்கே பயங்கரமான எலி முகத்துடன் நான்கு ஆள் உயரத்தில் ஒரு ராட்சசன் நின்றிருந்தான். அவன் சுவரில் இருந்த தத்ரூபமான பூனைகளைப் பார்த்து பயந்து, அலறியபடி, காட்டுக்குள் ஓடி விட்டான்.

விடிந்த பின் வெளியே வந்த ஜிங்-ஜிங், மக்களைக் கூட்டி எலி ராட்சசன் ஓடி விட்டதை அறிவித்தான். மகிழ்ச்சியில் திளைத்த மக்கள், அவனை கோயிலின் ஆஸ்தான குருவாக நியமித்தனர். அந்தப் பூனை ஓவியங்களையும் அழிக்காமல் பாதுகாத்தனர்.

திரைப்படத்தின் தந்தை!



1. அமெரிக்காவில் மிலான் என்கிற சிறிய நகரத்தில் 11.02.1847ல் பிறந்தார்.
2. பத்திரிகைகள் மற்றும் காய்கறிகளை விற்று வருமானம் ஈட்டினார்.
3. இரசாயனத் துறையில் அதிக அளவில் நாட்டம் கொண்டவர்.
4. பழைய கூட்ஸ் வண்டிப் பெட்டியை பரிசோதனைக் கூடமாக ஆக்கிக் கொண்டவர்.
5. 'பெருவழித் தூதன்' என்ற பத்திரிகையை நடத்தியவர்.
6. 1093 கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர்.
7. இவருக்கு ஒரு காது மட்டுமே கேட்கும்.
8. தந்தியடிக்கும் வேலையிலும் இவர் ஈடுபட்டிருந்தார்.
9. 'மென்லோ பார்க்' என்கிற இடத்தில் பெரிய தொழிற்சாலையை நிறுவியவர்.
10. இன்று நாம் பார்த்து ரசிக்கக்கூடிய திரைப்படத்தைக் கண்டுபிடித்தவர்.

- கி. சிந்து, உ.எண்.786 ஒன்பதாம் வகுப்பு,
ராஜ்மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை




கையெழுத்து

உலகப் புகழ்பெற்ற ஓவியர் 'பிகாஸோ' உயர்ரக மர பீரோ வாங்குவதற்காக மரச் சாமான்கள் செய்யும் ஒரு கடைக்குச் சென்றார். தனக்கு வேண்டிய பீரோவின் அமைப்பு பற்றிய விபரங்களைக் கடை முதலாளி யிடம் கூறினார். அவருக்குச் சரியாகப் புரியாததால், பிகாஸோ ஒரு காகிதத்தை எடுத்து தன் மனத்தில் கற்பனை செய்திருந்த பீரோவின் படம் ஒன்றை வரைந்தார். ''இந்த மாதிரியான பீரோவைச் செய்வதற்கு எவ்வளவு செலவாகும்?'' என்று கேட்டார்.

உடனே, கடைக்காரர் அந்தப் படத்தைக் காட்டி, ''படத்தின் கீழே உங்கள் கையெழுத்தை மட்டும் போட்டு என்னிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் பணம் எதுவும் கொடுக்க வேண்டாம்;'' என்றார்.

- ஆர். அம்பிகா, மதுரை



நிறம்

டாக்டர் அம்பேத்கர் வெளிநாட்டுக்குச் சென்றிருந்த சமயம், அவரைச் சந்தித்த ஆங்கிலேயர் ஒருவர் இந்தியர்களை அவமானப்படுத்த எண்ணி, ''ஆங்கிலேயர்கள் எல்லோரும் ஒரே நிறத்தில் இருக்கிறோம். அதனால் நாங்கள் எல்லாவற்றிலுமே சிறந்து விளங்குகிறோம். ஆனால், இந்தியர்கள் பல நிறங்களில் உள்ளனர். அதனால்தான் வளர்ச்சி பெறவில்லை' என்று மட்டம் தட்டிப் பேசினார்.

இதைக் கேட்ட அம்பேத்கர் அந்த ஆங்கிலேயேரிடம், ''கழுதைகள் அனைத்தும் ஒரே நிறத்தில்தான் இருக்கும். ஆனால், குதிரைகள் பல் வேறு நிறங்களில் இருக்கும். அதற்காக குதிரைகள் மட்டமானவை அல்ல!'' என்றார் அமைதியாக.



- மா. கண்ணன், திருநெல்வேலி

பரிவு

சம்பவம்

ருஷ்ய எழுத்தாளரான டால்ஸ்டாய் பெருஞ் செல்வந்தர்; மிகுந்த இரக்க குணம் உடையவர். தேடி வருபவர்களுக்கு உதவுவார்.

ஒருநாள் டால்ஸ்டாய் ஏதோ வேலையாக வெளியூருக்குப் பயணம் செய்துகொண்டிருந்தார். வழியில் கந்தல் ஆடையுடன் காட்சி அளித்த பிள்சைக்காரன் ஒருவன் அவரிடம், ''ஐயா! நான்கு நாளாகப் பட்டினி, இந்த ஏழைக்கு ஏதேனும் பிச்சை போடுங்கள்'' என்று கையை நீட்டினான்.

உடனே, டால்ஸ்டாய், தம் சட்டைப் பைகளைத் துழாவினார். உண்மையிலேயே அப்பொழுது அவரிடம் ஒரு காசுகூட இல்லை.

வறுமையில் வாடும் அந்தப் பிச்சைக்காரருக்கு உதவ முடியவில்லையே என்று மிகவும் வருந்தினார். எனவே, அவர் பிச்சைக்காரரைப் பார்த்து, ''சகோதரனே! உண்மையாகவே என்னிடம் இப்பொழுது காசு இல்லை. நீ என் வீட்டுக்கு வந்தால் நான், உனக்கு நிறைய காசு போடுகிறேன்'' என்றார்.


இதைக் கேட்ட அந்தப் பிச்சைக்காரர், தழுதழுத்த குரலில், ''ஐயா! யாரும் இதுவரை எனக்கு அளிக்காத பெரிய பிச்சையைத் தாங்கள் எனக்கு அளித்தீர்கள், என்னையும் மனிதனாக மதித்துச் 'சகோதரனே' என்று அழைத்தீர்கள். அதுவே எனக்கு போதும்!'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

- சு. அபிஷேக்,
உ.எண். 518, சென்னை



"தேன் போதும்!"

கதை: எஸ். தணிகை வேல், உ.எண்:762, காஞ்சிபுரம். படம்: பிள்ளை



கோகுலம் டைஜஸ்ட்



இந்த டைஜஸ்டில்...

உள்ளே...



புகழ்ச்சி!

என்னுடைய நண்பன் படிப்பில் வெகு சுமார். எப்போதும் விளையாட்டில் கவனம் செலுத்துவான் என்பதால், ஆசிரியர் அடிக்கடி அவனை ஹோம்வொர்க், டெஸ்ட் என்று வேலை வாங்கிக்கொண்டே இருப்பார். தொடர்ந்து இப்படிச் செய்ததால், நிஜமாகவே அவன் நன்றாகப் படிக்க ஆரம்பித்துவிட்டான். மாதாந்திரத் தேர்வின் விடைத்தாள்களை கொடுத்துக்கொண்டே வந்த ஆசிரியர், அவனிடம் 'டேய்... நீ எவ்வளவு மார்க் வாங்கியிருக்க தெரியுமா?'' என்றார். என் நண்பன் அமைதியாக நின்றான். அவரே தொடர்ந்து, ''80 மார்க்குடா. நல்லா படிக்கணும்னு ஒரு முடிவுக்கு வந்துட்ட. இந்த வெறியோட படி. பெரிய ஆளா வருவே?'' என்றார். அதைக் கேட்ட நண்பன், ''சார், கூச்சமா இருக்கு சார். என்னைப் புகழ்ந்து பேசாதீங்க'' என்றான் நெளிந்தபடி. அதைக்கேட்ட ஆசிரியர் புன்னகையுடன் அவனைச் செல்லமாகத் தட்ட, மாணவர்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

- ஆர். பிரியதர்ஷினி, உ.எண். 1089, அரியலூர்

தாமதம்



எங்கள் வகுப்பாசிரியர் காலந் தவறாமையை கண்டிப்புடன் கடைப்பிடிப்பவர். ஒருநாளும் அவர் தாமதமாக வகுப்புக்கு வர மாட்டார். மாணவர்கள் வந்தாலும் அனுமதிக்க மாட்டார். அதே போல 'யூ கேன் கோ' (You can go) என்று கூறி வெளியே அனுப்பி விடுவார்.

அன்றைக்கு, அவர் வகுப்புக்கு அரை மணி நேரம் தாமதமாக வந்தார். அப்போது கடைசி பெஞ்சில் இருந்து சேட்டை செய்யும் ஒரு மாணவன், அவர் சொல்வது போலவே



'யூ கேன் கோ' என மெல்லிய குரலில் சொன்னான். அதைக் கவனித்து விட்ட ஆசிரியர், ''தம்பி... ஒண்ணு தெரியுமா... இரயில் லேட்டா வரலாம்; ஆனால், இரயிலுக்குப் போறவங்க லேட்டா வரக் கூடாது!'' என்று சொன்னார். உடனே, அதே மாணவன் எழுந்து, ''சார், நான் சொன்னது தப்புதான்; அதனால்தான் நீங்க சரிப்படுத்த முடிஞ்சது'' என்றான் மீண்டும். அவனது குறும்பை ரசித்து, ஆசிரியரும் புன்னகைத்தார்.

- த. மணிமோகன்,
பதினொன்றாம் வகுப்பு,
அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி,
வெள்ளகோயில்



நான் பொதுத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது எங்கள் அறைக்கு வந்த கண்காணிப்பாளர் கூர்ந்து கவனித்தபடியே அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தார். பிறகு, அவர் என் பக்கத்தில் நின்றபடியே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் என் பக்கத்தில் நின்றதிலிருந்து நான் படபடப்பாகிவிட்டேன். எனக்கு என்ன எழுதுவதென்றே தெரியலை. எல்லாமே மறந்து போனதுபோல் இருந்தது. சிறிது நேரம் கழித்து எங்களிடம் 'Question paper எப்படிருக்கு' என்று கேட்டார். உடனே ஒரு மாணவன் வேகமாய் எழுந்து ''சார்! எப்பவும் போல வெள்ளையாத்தான் இருக்கு'' என்றான். தேர்வினால் உண்டான படப்படப்பையும் மீறி அனைவருமே சிரித்து விட்டோம்.

- பு. இந்துமதி, காஞ்சிபுரம்

“வெள்ளையா இருக்கு”





“எப்படிச்

குட்டிக் கதை

சேர்த்தாய்?"

"அப்பா, என்னோட விளையாட வாப்பா..."

அன்று முடிக்க வேண்டிய அலுவலகக் கோப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்த செல்வராஜை தொந்தரவு செய்தான் ராஜா.

பொதுவாகவே அலுவலக வேலைகளை வீட்டுக்கு எடுத்து வந்து செய்ய விரும்பாதவர் செல்வராஜ். மறுநாள் ஆடிட்டிங் என்பதால், அத்தனை ஃபைல்களையும் அன்றே முடித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு. எனவே, அனைத்தையும் எடுத்து வந்திருந்தார்.

அது ராஜாவுக்குப் புரியவில்லை. எப்போதும் வீட்டுக்கு வந்தவுடன் தன்னுடன் விளையாடும் அப்பா, ஏதோ காகிதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு மிகவும் கோபமானது. அதனால் பிடிவாதம் பிடித்தான்.

வேலை தடைப்படுகிறதே என்று கோபம் வந்தபோதும், செல்வராஜ் அதை வெளிப்படுத்தவில்லை. மாறாக, தேசப்படம் ஒன்றை எடுத்தார். அவனிடம் காட்டினார்.

"ராஜா, இந்தப் படத்தை நல்லா பார். இந்தப் படத்தை இப்போ துண்டு துண்டா ஆக்கி, உன்கிட்டே தருவேன். நீ அதை திரும்பவும் ஒண்ணா சேக்கணும். செய்ய முடியுமா உன்னால? இதுதான் விளையாட்டு!"

அப்பா சொன்னாவுடன் உற்சாகமாய் தலையாட்டினான் ராஜா.

சம சதுரங்களாக அப்பா வெட்டிக் கொடுத்த காகிதத் துண்டுகளை, எடுத்துக்கொண்டு போய் தரையில் அமர்ந்தான். அவற்றை முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றி அடுக்கிப் பார்க்க ஆரம்பித்தான்.

செல்வராஜ் மீண்டும் தன்னுடைய வேலையில் மூழ்கிப் போனார். மறுநாள் காலை அலுவலகத்துக்குச் செல்வதற்குள் முடிக்க வேண்டிய பணிகள் மட்டுமே அவருக்குள் நிறைந்திருந்தன.

அவரைப் போன்றே ராஜாவும், அந்த காகிதத் துண்டுகளை மாற்றி மாற்றி அடுக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பாவிடம் எழுந்து வரவும் இல்லை; கூப்பிடவும் இல்லை. நேரம் ஓடிக்கொண்டே இருந்தது.

வேலையில் மூழ்கியிருந்த செல்வராஜைக் கலைத்தது ராஜாவின் குரல்:

"அப்பா! இங்கே பாருங்க. நான் சேர்த்துட்டேன்!"

ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்த செல்வராஜ் சந்தோஷமாய்க் கேட்டார்.


"எப்படி ராஜா சேர்த்த?"

"மேப் இருக்கற பக்கமா சேக்க முடியலை. திருப்பிப் பார்த்தேன். ஒரு மனிதரோட படம் இருந்தது. அந்தப் படத்தைச் சேர்த்தேன். படம் சேர்ந்துடுச்சு" உற்சாகமாய்ச் சொன்ன ராஜாவை, வாரி அணைத்து முத்தமிட்டார் செல்வராஜ்.

- எஸ். தணிகைவேல்,
உ.எண். 762
காஞ்சிபுரம்



அ.வேல்முருகன்,
உ.எண்.951
காமராஜ் மே.நி.பள்ளி,
நம்பியூர்



மனிஷா மணிமாறன்,
உ.எண். 87, ஒன்பதாம் வகுப்பு,
பாலகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி,
வடக்கன்குளம்,

ஆர். ஸ்ரீவித்யா,
உறுப்பினர் எண்: 466,
கோவை



ஆர். கௌசல்யா, எட்டாம் வகுப்பு,
உறைவிடப்பள்ளி,பாப்பாரப்பட்டி



உங்கள்



சி.நிவேதிதா,
உ.எண்.210,
ஆறாம் வகுப்பு,
ப்ளூ ஸ்டார்
மேனிலைப் பள்ளி,
அரும்பார்த்தபுரம்



எஸ். ஹரீஸ்,
ஆறாம் வகுப்பு,
மான்ட்ஃபோர்டு பள்ளி,
திருச்சி - 19

ஸ்ரீ.ஸ்வேதா,
உ.எண்.875, ஒன்பதாம் வகுப்பு,
வேலுடையார் மேல் நிலைப் பள்ளி,
திருவாரூர்



சி.கதிர், பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி
நம்பியூர்



கைவண்ணம்!




தூங்கா

திருஆலவாய், நான்மாடக் கூடல் என்றெல்லாம் புகழப் படும் மதுரைதான் எங்கள் ஊர். பாண்டிய மன்னர்களின் தலைநகராகவும், தமிழ் வளர்த்த திருநகராகவும் விளங் கியது இந்த ஊர்தான்.

பாண்டியர்கள் மட்டுமின்றி, சோழர்கள், நாயக்க மன் னர்கள்... என்று பலருடைய ஆட்சியிலும் இது முக்கிய நகராக விளங்கியது. 'தூங்கா நகரம்' என்று அழைக்கப்படும் இந்த மதுரை மாநகரின் நடுவே ஓடுகிறது வைகை நதி.

பழைய தமிழ் இலக்கியங் களில் மதுரையின் அழகும், சிறப்பும் விவரிக்கப்பட் டுள்ளன.

வைகை என்றவுடன்



பா.பார்த்தசாரதி,
உ.எண்:366,
வேதிரிய வித்யாலயா,
மதுரை.





நகரம்!

நினைவுக்கு வருவது அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவும், மீனாட்சி திருக் கல்யாணமும்தான். மதுரையின் மிகப் பெரிய திருவிழாவாக இதனை வடிவ மைத்தவர் மன்னர் திருமலைநாயக்கர். அதற்கு முன்பு இந்த விழாக்கள் வெவ் வேறு காலங்களில் தனித்தனியே நடை பெற்று வந்தன.

சிற்பக்கலை விருந்தாகவும், அருள் பெருக்காகவும் தமிழின் விளைநிலமாக வும் விளங்குவது அன்னை மீனாட்சி யின் திருக்கோயில்.

சமணர்கள் வாழ்ந்ததன் அடையாள மாக கல் படுக்கைகள் அமைந்த சமண மலை, யானை மலை, நாக மலை ஆகியவை மதுரைக்குப் புகழ் சேர்ப் பவை. முருகனின் படைவீடுகளான திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை ஆகியவை மதுரைக்கு அருகில்தான் உள்ளன.

மகாகவி பாரதி பணியாற்றிய சேது பதி உயர்நிலைப் பள்ளி, திருமலை நாயக்கர் மகால், காந்தி மியூஸியம் ஆகியவை இங்கு குறிப்பிடத்தக்கவை.

மாரியம்மன் ஆலய தெப்பக்குளம் தோண்டும்போது வெளிப் பட்ட விநாயகர்தான், மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நிறுவப் பட்டுள்ள முக் குறுணி விநாயகர்.

ஜல்லிக்கட்டுக்குப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் உள்ளதும் மதுரையில் தான். மதுரையின் பெருமையைச் சொல் கின்ற இன்னொரு விஷயம் குண்டு மல்லி. மணம் மிகுந்த இந்த மல்லிகை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி, மதுரை சோமு... உள்ளிட்ட இசைக் கலைஞர்கள் மதுரைக்குப் புகழ்சேர்த் தவர்கள்.



முதன்

● இந்தியாவின் தீப்பெட்டித் தொழிற்சாலை முதன்முதலாக கொல்கத்தாவில் 1921- ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

● தக்காளியை முதன்முதலில் பயிரிட்ட நாடு அயர்லாந்து.

● இங்கிலாந்தில் வெளியான முதல் தமிழ் பத்திரிகை 'உதய தாரகை'.

● விண்வெளியில் பறந்த முதல் இந்திய வீராங்களை கல்பனா சாவ்லா.

● தான் பங்கேற்ற முதல் மூன்று டெஸ்ட்களிலும் செஞ்சுரி அடித்த இந்திய கிரிக்கெட் வீரர் முகமது அசாருதீன்.

● ஏவுகணை தொழில்நுட்பத்தை போரில் பயன்படுத்த முடியும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திய முதல் இந்திய மன்னர் திப்பு சுல்தான்.

● 'மேஜிக் கியூப்' என்ற பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருளை முதன் முதலில் கண்டுபிடித்தவர் 'எர்னோ ரூபிக்'

● 'ஆல் இண்டியா ரேடியோ' என்று வழங்கப்படும் இன்றைய வானொலி சேவை முதலில் 'இந்தியன் பிராட் கேஸ்டிங் சர்வீஸஸ்' எனப்பட்டது.

- பி. சர்வேஸ்வரன், உ.எண்.456, மதுரை

கியூபா நாடுதான் முதன்முதலாக 1899ம் ஆண்டு 'சைக்கிள் படத்துடன்' கூடிய தபால் தலையை வெளியிட்டது. ஒரு தபால்காரர் சைக்கிளில் வருவது போன்ற படம் 'தபால் தலையில் இடம் பெற்று இருந்தது.

-கோவி. இராஜேந்திரன், மதுரை



* ராகேஷ் சர்மா

* ஜூலியஸ் சீஸர்

வயிற்றில் அறுவை சிகிச்சை


செய்து, குழந்தை பிறப்பதை 'சீஸேரியன்' என்கிறோம். இது ஏன் தெரியுமா? இப்படி அறுவை சிகிச்சை செய்து பிறந்த உலகின் முதல் குழந்தை ஜூலியஸ் சீஸர். அவரது பெயரால்தான் சிஸேரியன் என்று இன்னும் அம்முறைக்குப் பெயர் வழங்கி வருகிறது!

- சு. அபிஷேக், ஏழாம் வகுப்பு,
ஈவார்ட்ஸ் மேல்நிலைப் பள்ளி,
சென்னை - 101

ஆக்ஸ்ஃபோர்ட் (Oxford) ஆங்கில அகராதி முதன் முதலாக வெளியிடப் பட்டது.

- இந்தியாவின் முதல் விண்வெளி பயணி ராகேஷ் சர்மா. இவர் 1984ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதி இவர் சோயுஸ் ட்டி-11) என்ற விண்கலத்தில் விண்வெளிக்குப் பயணித்தார்.

முதலாக...





* சார்லஸ் டிக்கன்ஸ்

பத்திரிகைகளில் முதன்முதலில் தொடர்கதை எழுதும் பழக்கத்தை உருவாக்கியவர் ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ்.

- சுப. நேசிகா, காயக்காடு

- 1884 பிப்ரவரி 1 அன்று


- தமிழின் முதல் உரைநடை நூல் 'இறையனார் களவியல்' உரை.

- மா.ரா. கௌதம்,
உறுப்பினர் எண். 975,
பத்தாம் வகுப்பு,
இந்து மேல்நிலைப் பள்ளி,
வாணியம்பாடி

வெங்காயத்தின் கண்ணீர்!

கதை: ஸ்ரீ.ஸ்வேதா. உ.எண்:875. திருவாரூர். படம்: பிள்ளை




நீரில் குதித்த ஐஸ் கரைய...
சொன்னதை கேட்காம குதிச்சியே
ஏன் இப்படிப் பண்ணே?
ஆ... ஐயோ....!
தக்காளியும் வெங்காயமும் வருத்தமாய்...
நல்ல நண்பனை இழந்து விட்டோம்...
ஆம்; மிக வருத்தமாய் இருக்கிறது...
போதும் சுற்றுலா; வீடு திரும்புவோம்!
ஆமாம்! வா போகலாம்!
வழியில்...
அதோ பார் மயில்!
அட! அழகா இருக்கு
கீ...கீ
சட்டென்று தக்காளி மீது பாய்ந்த கிளி...
ஆ... நண்பா!
என் நண்பனை விட்டுவிடு!
கிளி பறந்து மறைய, சோகமாய் வீடு திரும்பியது வெங்காயம்!
ம்... ஹூம் இனி எனக்காக யார் இருக்கிறார்கள்?
வெங்காயம் உரிக்கும்போது நாம் கண்ணீர் வடிப்பது இதனால்தானோ?



தத்தளிக்கும் மீன்!

I 1. கையில் இருக்கும் போது பெரிய தேங்காய் அளவு இருக்கும்; வாயில் போட்டால் நிமிடத்தில் கரைந்து விடும் - அது என்ன?

2. ஓயாது இரையும்; எந்திரம் அல்ல, உருண்டோடி வரும்; பந்து அல்ல - அது என்ன?

3. காற்றைக் குடித்து, கைகளில் தவழும் - அது என்ன?

- ஆர்.மதுமதி, மதுரை-20

II.1 அசுத்தமாய் இருக்கும்போது வெள்ளையாய் இருக்கும்; சுத்தமாய் இருக்கும்போது கறுப்பாக இருக்கும் - அது என்ன?

2. இரண்டு கைகள் உண்டு; எட்டிப் பிடிக்க இயலாது; நான்கு கால்கள் உண்டு; நடந்து செல்ல முடியாது; முதுகு உண்டு; முகமில்லை - அது என்ன?

- பி.சர்வேஸ்வரன்,
உறுப்பினர் எண்:456, மதுரை

III.1. நீந்தத் தெரியும். ஆனால் குதிக்கத் தெரியாது - அவன் யார்?

2. அடடா, என்ன வெளிச்சம்! எண்ணெய் இல்லை. திரியும் இல்லை. ஏற்றி வைக்க ஆளும் இல்லை - அது என்ன?

3. செதுக்காத தூண், பண்ணாத பானை; ஊற்றாத நீர்; பூசாத சுண் ணாம்பு- அது என்ன?

- எஸ். கவிதா, ஏற்காடு







4. தொப்பையனுக்கு ஒரு வாசல்; அவன் தோழனுக்கு இரண்டு வாசல் - அது என்ன?

- ம.விவேக், குட்டம்

VI. 1. வரும்போது வெண் சிரிப்பு, வளர வளர தகதகப்பு. போகும்போது பெருஞ்சிவப்பு - அது என்ன?

2. முள்ளால் நிறைந்த சட்டை போட்டு உள்ளே தேன் சுவை பதுக்கி வைத்து, கள்ளத் திருடன் கடை வீதி வந்தான் - அது என்ன?

3. கடலிலே பிறந்த கன்னிப் பெண். காற்றிலே மிதப்பாள். வானத்திலே சுற்றுவாள். கொஞ்சம் குளிர்ந்தாலோ நிலத்திலே குதித்து விடுவாள் - அது என்ன?

- கே.எம்.நந்தினி,
உறுப்பினர் எண்: 776,
கும்பகோணம்

IV அகன்ற வாய் உடையவர்; திறந்த வாய் மூடாதவர்?

2) ஆண்டுக்கு ஆண்டுக்கு வரும் வரி; அடுத்தடுத்து வரும் வரி-அது என்ன வரி?

3) உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டித் தொங்குது


- கு. சிவசங்கர், எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, விளாத்திகுளம்

V 1. தண்ணீருக்குள் கிடந்தாலும் இவள் தண்ணீரைத் தொட விட மாட்டாள் - அவள் யார்?

2. பல்லைப் பிடித்தால் பதறிப் பதறி அழுவான் - அவன் யார்?

3. தண்ணியில்லாக் குளத்திலே, தத்தளிக்குது ரெண்டு மீன்கள் - அது என்ன?

விடைகள்:



I 1) பச்சை மிட்டாய், 2) கடல் அலை, 3) [illegible]

II 1. கரும்பலகை, 2. [illegible]


III 1. கப்பல், 2. மின்மினிப் பூச்சி, 3) தென்னை

IV 1) செக்கு, 2. ஜனவரி, பிப்ரவரி, 3) பலாக்காய்

V 1.தாமரை இலை, 2. ஆர்மோனியம், 3) கண், 4. சட்டை

VI. 1.சூரியன், 2. பலாப்பழம், 3. மழை

கோகுலம் காலண்டர்



ஜனவரி

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

பிப்ரவரி

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28

மார்ச்

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

ஏப்ரல்

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

ாவுக்கு வருபவை ஆறு மற்றும் குளத்தில் நாம் காணும்
ம், பாசிகளையும் புழுக்களையும் உண்டு, நீரைத்
மீன்கள்.

ல்லப்படும் அனைத்துமே மீன்களாகக் கருதப்படுவதில்லை என்பது
க, நட்சத்திர மீன், ஜெல்லிமீன், ஓட்டு மீன் (Shell fish)
ன்று தன் நிறத்தை மாற்றிக் கொள்கின்ற கணவாய் (Cuttle fish)
ாகக் கருதப்படுவதில்லை.

னவென்றால், பதினாறாம் நூற்றாண்டு வரை ஸீல்கள்,
ா, நீர்யானைகள் போன்றவைகூட மீன்களாகக்

110கி.மீ.



கருதப்பட்டன என்பதுதான். ஆனால், மீன் வளத்துறையில் - மீன் என்று சொல்லப்படுபவை செதில்களோடு கூடியவை மட்டும்தான்.

இந்த மீன்களிலும் தாடையுள்ளவை, தாடையற்றவை... என்று பலப்பல வகைகள் காணப்படுகின்றன. அவற்றின் வடிவம், உணவு, நிறம், தன்மை, நீந்தும் வேகம்... இப்படி அனைத்திலுமே வேறுபாடுகள் காணப்படுகின்றன.


சாம்பல் நிறச் சுறாக்கள் (shark), நீல நிறமுடைய கேசியோ லூனாசிஸ் (Casio lunaris), வெள்ளியைப் போன்ற நிறங்கொண்ட மடவை (Murrel), கறுப்பு நிறத்தில் காணப்படும் கறுமோலி (Black Molly), பச்சை நிறத்தில் காணப்படும் கிளி மீன் (Parrot fish), வெண்ணிறமான வெண்மோலி (White Molly), மஞ்சள் நிறம் கொண்ட ஆலோஸ்டோமஸ் சைனென்ஸிஸ் (Aulostomus chinesis).... என்று பலப்பல நிறங்களில் காணப்படுகின்றன மீன்கள்.

அதைப் போன்றே, நீந்தும் வேகத்திலும் மீன்கள் அசத்துகின்றன. தங்கமீன் மணிக்கு ஐந்து கிலோமீட்டர் வேகத்திலும், சால்மன் (salmon) பதின்மூன்று கி.மீ வேகத்திலும் நீந்துகின்றன. அச்சமூட்டுகின்ற சுறாமீன் மணிக்கு 36 கி.மீ வேகத்திலும், நீண்ட மூக்குடைய ரம்பச் சுறாமீன் 96 கி.மீ வேகத்திலும் நீந்துகின்றன. கடலின் குழந்தைகளைப் போலத் துள்ளி விளையாடும் டால்பின்கள் மணிக்கு 56 கி.மீ வேகத்தில் நீந்தக்கூடியவை. என்றாலும், மணிக்கு 110 கி.மீ வேகத்தில் நீந்தக்கூடியது பாய்மர மீன் (Sail fish), மிக அதிக வேகத்தில் நீந்தும் மீன் என்று கருதப்படுவது இந்தப் பாய்மர மீன்தான்!

* பாய்மர மீன்



* ஆலோஸ்டோமஸ் சைனென்ஸிஸ்



ஏ. ஸ்ரீபாரதி,
உ.எண். 919,
கும்பகோணம்

மரியாதை ஏன்?

கதை: எஸ்.சுதாகர். எட்டாம் வகுப்பு. காமராஜ் மேல் நிலைப்பள்ளி. நம்பியூர். படம்: பிள்ளை



பொதுவாக, கால்வாய் என்பதை நதியிலிருந்து பிரித்து வயல்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் நீர்த்தடங்களாகவே நாம் அறிவோம். ஆனால், சாலையைப் போன்ற பயணத்துக்குப் பயன்பட்ட கால்வாய்களும் உண்டு.

தரங்கம்பாடியில் இருந்து விசாகப் பட்டினம்வரை பொருட்களைக் கொண்டு செல்லும் படகுப் போக்கு வரத்துக்கு, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பயன்பட்ட பக்கிங்ஹாம் கால்வாய் தமிழ்நாட்டில் சிறந்த உதாரணம்.

இதைப் போன்றே, கப்பல் போக்கு வரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்ற முக்கியமான கால்வாய் பனாமா கால்வாய். உலகின் மிக அழமான கடலான பசிபிக் பெருங்கடலையும், கரீபியன் கடலையும் இணைக்கும் இந்தக் கால்வாய் 82 கி.மீ நீளம் உடையது. கால்வாயின் மொத்தப் பரப்பு, ஐந்து லட்சத்து எண்பத்து எட்டாயிரம் சதுர மீட்டர் என்றால், அந்தக் கால்வாயின் பிரமாண்டம் எப்படிப்பட்டது என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

உலக வர்த்தகத்துக்கான பொருட்களில் பன்னிரண்டு சதவிதப் பொருட்கள், இந்த பனாமா கால்வாய் வழியாகவே செல்கின்றன. சான்பிரான்ஸிஸ்கோவில் இருந்து கடல்வழியாக நியூயார்க்



கடல்களை இணைக்கும்

பி.தங்கவேல்,
உ.எண்:812,
தாரமங்கலம்.

செல்லும் பயண தூரத்தில் 12,500 கி.மீ தொலைவைக் குறைத்ததும் இந்த பனாமா கால்வாய்தான்.

1881 ஆம் ஆண்டு இந்தக் கால்வாய் அமைக்கும் பணி துவங்கியது. 1889வரை நடைபெற்ற இந்தப் பணியின்போது சுமார் 22000 பேர் இறந்தார்கள். இதனால், இந்த கால்வாய்ப் பணி தடைப்பட்டு மீண்டும் 1904 ஆம் ஆண்டு துவங்கியது. 1914ஆம் ஆண்டு இந்தப் பணி நிறைவடைவதற்குள் மேலும் 5600 பேர் மரணமடைந்தார்கள்.


ஆக, முப்பதாண்டுகளாக நடைபெற்ற இந்தக் கால்வாய்ப் பணி நிறைவேற 75,000 பணியாளர்களும், 454 மில்லியன் டாலர் பணமும் பயன்படுத்தப்பட்டன. அதன் பயனாக, 1914 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதி, வர்த்தகத்துக்கான இந்தக் கால்வாய் திறந்துவிட்டது.

உலகின் முக்கிய கால்வாய்களில் ஒன்றாக விளங்கும் இந்த பனாமா கால்வாய் வழியாக சராசரியாக ஒரு ஆண்டுக்கு 13,000 கப்பல்கள் பயணிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



கால்வாய்!

திறமை



ஏ. தீபக்,
நான்காம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி




ஆர். ஐஸ்வர்யா,
உ.எண்.619,
இரண்டாம் வகுப்பு,
கலைமகள் கல்வி
நிலையம்,
ஈரோடு

சுட்டீஸ் கைவண்ணம்!


ஜெ.சுவேதா, நான்காம் வகுப்பு,
வேளாங்கன்னி ராஜ் மெட்ரிகுலேசன் பள்ளி,
மயிலாடுதுறை



ரா. பாலாஜி,
உ.எண்.546
கும்மிடிப்பூண்டி




எஸ். பவதாரணி, முதலாம் வகுப்பு,
நெ.1, ஏர் ஃபோர்ஸ் பள்ளி,
குவாலியர்



வித்தியாசங்களைக் கண்டுபிடி!

மூளைக்கு வேலை



இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



தென்னிந்தியாவின்



(I) கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைக் கொண்டு 10 விடைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். 10 விடைகளின் முதல் எழுத்தும் 'கோ'

1. இந்தியாவின் மிகச் சிறிய மாநிலம்.

2. மதுரையை ஆண்ட மன்னன் பாண்டிய நெடுஞ்செழியனின் மனைவி.

3. கடலை மிட்டாய்க்குப் பெயர் பெற்ற தமிழக ஊர்.

4. தமிழ்த் தோலைக்காட்சியில் வினாடி வினா இந்தப் பெயரில் நடத்தப்பட்டது.

5. 'விடுதலைச் சுடர்' என்றழைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்.

6. 'ஜான் பெம்பர்டன்' என்ற அமெரிக்கர் கண்டுபிடித்த குளிர் பானம்.

7. ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் கதாநாயகன்.

8. தமிழில் துப்பறியும் கதைகள் எழுதிய முதல் பெண் எழுத்தாளர் (பின்னே இனிஷியல்)

9. உலகிலேயே அதிகம் விளைவிக்கப்படும் தானியம்.


10. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எனப்படும் தமிழக ஊர்.

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உ.எண். 34,
போடி நாயக்கனூர்

(II)(a) ஒரு கூண்டில் சில குரங்குகளும், சில கிளிகளும் இருந்தன. அவற்றின் தலைகளை எண்ணினால் 20 வருகிறது. கால்களை எண்ணினால் 48 வருகிறது. அப்படியானால், கிளிகள் எவ்வளவு? குரங்குகள் எவ்வளவு?



(b) பக்கத்தில் கொடுக்கப்பட் டிருக்கும் 10 கட்டங்களில் 21 முதல் 30வரை உள்ள எண்களைக் கட்டங்களில் நிரப்பினால், ஒவ்வொரு வரிசையையும் கூட்டினால் கூட்டுத் தொகை 101 வர வேண்டும். கண்டுபிடியுங்களேன்!





(c) ஓர் எண்ணை இரு மடங்காக்கி, அதனுடன் ஏழைக் கூட்டினால் 17 வரும். அந்த எண் என்ன?

- பி.சர்வேஸ்வரன்,
உ.எண். 456, மதுரை - 1

(III) (a) சிறுவன் ஒருவன் தலையில் மாம்பழக் கூடையுடன் சென்று கொண்டிருந்தான். கார் ஒன்று மோதி பழக் கூடை கீழே விழுந்து பழங்கள் நசுங்கிவிட்டன.

மான்செஸ்டர்?



காரோட்டி சிறுவனைப் பார்த்து, ''கூடையில் எத்தனை பழங்கள் இருந்தன? நான் அதற்குரிய பணத்தை தந்து விடுகிறேன்'' என்றான்.

சிறுவனோ, ''எத்தனை இருந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால், இரண்டாலோ, மூன்றாலோ, நான்காலோ வகுத்தால் ஒன்று மிஞ்சும். ஐந்தால் வகுத்தால் ஒன்றும் மிஞ்சாது'' என்றார்.

அப்படியானால் கூடையில் இருந்த பழங்கள் எத்தனை?

(b) 1 என்ற எண்ணை 10 முறை பயன்படுத்தி கூட்டினால் விடை 1234 வரும். எப்படி?

(IV) (a) ஒரு பெண் புடவையும் ஜாக்கெட்டும் 120 ரூபாய்க்கு வாங்கினாள். ஜாக்கெட்டை விட புடவையின் விலை 100 ரூபாய் அதிகம். புடவை என்ன விலை? ஜாக்கெட் என்ன விலை?

(b) ஒரு கடிகாரம் பொதுவாக அரை மணியை அறிவிப்பதற்கு ஒரு முறையும், எத்தனை மணியோ அதனை அறிவிப்பதற்கு அத்தனை முறையும் ஒலிக்கும்.

அந்தக் கடிகாரம் தொடர்ந்து மூன்றுமுறை ஒரு தடவை தான் ஒலிக்கும். அது எப்பொழுது?

- ஜி. பிரணவ்,
உறுப்பினர் எண்.424,
கருமண்டபம்




விடைகள் 56ம் பக்கம்

புத்திசாலி!

கதை: எஸ்.கே.செந்தமிழ் ராஜா. உ.எண்:962. கள்ளக்குறிச்சி. படம்: சொக்கலிங்கம்



கற்பனைக்கு வேலை



வண்ணம் தீட்டுங்கள்!

இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்

‘விளையாட்டு’

‘‘உங்களால் மட்டும் எப்படி இவ்வளவு கண்டுபிடிப்புகளை நிகழ்த்த முடிந்தது?’’

‘‘இந்தக் கண்டுபிடிப்புகள் அனைத்துக்கும் காரணமானவர் என்னுடைய அம்மாதான்!’’ என்ற விஞ்ஞானி தொடர்ந்து பேசினார்.

‘‘அப்போது எனக்கு நான்கு வயது. ஒருநாள் சமையலறை மேடையில் இருந்த ஒரு பாத்திரத்தை எட்டி எடுத்தேன். அது நிறையப் பால் இருந்தது. வாயகன்ற அந்தப் பாத்திரத்தை பிடிக்கத் தெரியாமல் கை தவறி விட்டு விட்டேன். பாத்திரம் கீழே விழுந்து பால் தரையில் கொட்டியது. அந்தச் சப்தம் கேட்டு வந்தாள் என் அம்மா. பயந்து நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்தாள். பிறகு, ‘ஹை,... எவ்வளவு ஜோரா பாலைக் கொட்டிருக்கே... அதுலயே கொஞ்ச நேரம் விளையாடு’ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

நான் சிந்தியிருந்த பாலில் கைகளாலும், கால்களாலும் அடித்து விளையாடினேன். சற்று நேரம் கழித்து அம்மா மீண்டும் வந்தாள். ‘‘அட... மேல எல்லாம் பால் தெளிச்சிருக்கே. நல்லா விளையாடினியா?’ என்று கேட்டபடி என் கையில் ஒரு துணியைக் கொடுத்தாள். இன்னொரு துணியை தன் கையில் எடுத்துக்கொண்டு, ‘‘வா, தரையை துடைக்கலாம்’’ என்றாள். இருவருமாகத் தரையைத் துடைத்தோம். பிறகு என்னைக் குளிப்பாட்டி உடை மாற்றிவிட்டாள்.

சற்று நேரம் கழித்து தோட்டத்துக்குப் போனோம். அங்கே, ஒரு வாளி நிறைய தண்ணீர் இருந்தது. அதனருகே வாய் குறுகிய ஒரு பாத்திரம் இருந்தது. என்னை அழைத்த அம்மா, ‘எங்கே, அந்தப் பாத்திரத்தில் நீரை எடுத்து வா’ என்றாள். நான் அந்தப் பாத்திரத்தின் கழுத்துப் பகுதியைப் பிடித்தபடி தண்ணீர் முகந்து வந்தேன்.

‘வெரிகுட். இப்படிப் பிடிச்சு தூக்கினா, பாத்திரம் நழுவாது. கீழேயும் விழாது. நீயே தெரிஞ்சுக்கிட்டியே’ என்று கைதட்டினாள்.


விஞ்ஞானி சொல்லி முடித்ததும் பேட்டியாளர் கேட்டார்:

‘‘இந்த நிகழ்ச்சி எந்த வகையில்



படிப்பினைக் கதை

விஞ்ஞானம்!



உங்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது?''

''அம்மா, அடித்திருந்தால் மறுமுறை பாத்திரத்தைத் தூக்க பயந்திருப்பேன். திட்டியிருந்தாலோ அதைச் செய்ய தயக்கம் வந்திருக்கும். இரண்டும் செய்யாமல், என்னை செயல்பட அனுமதித்தார். தவறை திருத்திக் கொள்ள வழிகாட்டினாள். விஞ்ஞானத்தின் அடிப்படையே இதுதான்.

ஒவ்வொரு கண்டுபிடிப்பும், பல தவறுகளை திருத்திய பிறகே வெளிப்படுகின்றன. தவறை அறிவதும், திருத்துக் கொள்வதுமே புதிய கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படை! அதை உணர்த்தியதால் என் அம்மாவே காரணம்!''

விஞ்ஞானி சொல்லி முடித்ததும் டி.வி.யில் அதை பார்த்துக் கொண்டிருந்த மூன்றரை வயது விநோதா தன் அம்மாவிடம் கேட்டாள்: 'நீ மட்டும் ஏம்மா என்னை பாலை கொட்டவே விட மாட்டேங்கிறே?''

அம்மா பதில் சொல்லாமல், அவளை அணைத்துக்கொண்டாள்.



- த. மணிமோகன்,
அரசு மே.நி.பள்ளி,
வெள்ளக்கோவில்



'மணி கட்டிய


* கிரீஸ்

பல ஆண்டுகளுக்கு முன்பு தென்மேற்கு ஆப்ரிக்காவில் மிகப் பெரிய 'எரி நட்சத்திரக் கல்' ஒன்று விழுந்தது! இதுவரை விண்ணிலிருந்து பூமியில் விழுந் தவைகளில் மிகப் பெரிய எரி நட்சத்திரக் கல் இதுதான் என்று கூறப்படுகிறது! அந்தக் கல்லின் பெயர் - 'ஹோபா'.

- மு.ஜமுனாதேவி, உ.எண்.301, வேட்டனூர்

உலகின் மிகப் பெரிய இந்துக் கோவில், கம்போடியாவில் உள்ளது. இதில் உறையும் தெய்வம் திருமால்; கட்டிய காலம் முதலாம் நூற்றாண்டு. முதலாம் இந்திர வர்மனால் கட்டப்பட்டது. புத்த சமயத் தவர் நிறைந்த நாட்டில் உள்ளது. இந்து சமயத்தைச் சேர்ந்த மிகப் பெரிய ஆல யம். அந்தக் கால சிற்பக் கலைக்கும் மக் களின் பக்திக்கும் சான்றாக மிகப்





* ஹோபா

பெரிய கோபுரங்களும், சுற்று பிரகாரங்களும் விளங்குகின்றன.

- மீ.சொர்ணம், உடுமலைப்பேட்டை



● கிரீஸ் என்றழைக்கப்படும் கிரேக்க நாடு, தனக்கு சொந்தமாக பெரிதும், சிறிதுமான 2,000 தீவுகளைக் கொண்டுள்ளது.

● அவற்றில் 160 தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். அதற்குக் காரணம், அங்கு நிலவும் தட்பவெப்ப நிலைதான்.

● கிரேக்க நாட்டின் தீவுகளில் 'சிரிட்' என்பது மிகப் பெரிய தீவாகும்.

● கிரேக்க நாட்டின் பெரும்பாலான பகுதிகள் 'மெடிடேரானியன்' கடலைச் சுற்றியே அமைந்துள்ளன.

● கிரேக்க நாட்டின் அழகிய கடற்கரைகளைக் காணவே பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் அங்கே குவிகின்றனர்.

- மு. அருண்குமார், உ.எண். 670, ஒசூர்

தொப்பி!'



பூல்ஸ்கேப் பேப்பர் என்பது 13½ x 17 அங்குலம் அளவுடைய எழுதக் கூடிய வெள்ளைத் தாளைக் குறிக்கும் 13-ம் நூற்றாண்டிலிருந்து 17-ஆம் நூற்றாண்டுவரை - இந்த மாதிரித் தாள்களில் ஒரிஜினாலிட்டியைக் குறிக்க, அதில் சர்க்கஸ் கோமாளிகள் அணியும் 'மணி கட்டிய தொப்பி'யை வாட்டர் மார்க்காகப் பதித்திருந்தார்கள். அதனால்தான் இதற்கு Fools cap paper என்ற பெயர் ஏற்பட்டது.

- ந.பிருந்தா, உ.எண்.1098





(I) 1. கோவா
2. கோப்பெருந்தேவி
3. கோவில்பட்டி
4. கோடீஸ்வரன்
5. கோபால கிருஷ்ண கோகலே
6. கோகோ கோலா
7. கோவலன்
8. கோதை நாயகி.வை.மு
9. கோதுமை
10. கோயம்புத்தூர்

(II)(a) குரங்குகள் - 4
கிளிகள் - 16


(b)

			21
			27
			30
25	24	29	23
22			
28			
26			

(c): 5

(III) (a) 25 பழங்கள்
(b) 1111+111+11+1=1234

(IV) (a) புடவை 110 ரூபாய்
ஜாக்கெட் 10 ரூபாய்
(b) மணி: 12.30, 1, 1.30



ஐந்து வித்தியாசங்கள்:

1. பறவை, 2. சிறுவனின் பல்
3. காளான், 4. மரத்தின் கிளை
5. குருவி

சரியான்னு பாருங்க!

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த நகைச்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று! அசத்துங்கள்!

1201. எம். பாரதி, ஏழாம் வகுப்பு, டி.ஏ.வி.சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை
1202. ப. ஸ்ரீதேவி, பதினொன்றாம் வகுப்பு, வேளாளர் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு
1203. க. நித்யா, பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1204. ஏ. நாராயணன், ஐந்தாம் வகுப்பு, சிறுமலர் துவக்கப்பள்ளி, சேலம்
1205. சாகிதா பானு, ஐந்தாம் வகுப்பு, சரஸ்வதி மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்
1206. பா. சஞ்ஜெய், ஏழாம் வகுப்பு, யு.ஆர்.சி, ஈரோடு
1207. சுவேதா பூரணி, முதல் வகுப்பு, ஸ்ரீ பரமஹம்ச வித்யா நிகேதனா பள்ளி, மைசூர்
1208. எம். விஜய், ஒன்பதாம் வகுப்பு, ஆர்.வி.ஜி.பி.மே.நி.பள்ளி, ஓசூர்
1209. ச.செந்தமிழ்ச் செல்வன், பதினொன்றாம் வகுப்பு, வ.உ.சிதம்பரனார் உ.நி.பள்ளி, புதுச்சேரி
1210. பி.அருண்செல்வன், ஆறாம் வகுப்பு, ஸ்ரீவித்யாமந்திர் பள்ளி, ராசிபுரம்
1211. சீ.அ.நரேந்திரகுமார், எட்டாம் வகுப்பு, சீதாதேவி கரோடியா ஹிந்து வித்யாலயா, சென்னை
1212. பூ.கௌசிகப்ரியா, ஐந்தாம் வகுப்பு, சான்ஜோஸ் பதின்ம மே.நி.பள்ளி, கோவை
1213. பூ. நித்யப்ரியா, பன்னிரண்டாம் வகுப்பு, சான்ஜோஸ் பதின்ம மே.நி.பள்ளி, கோவை
1214. மா.ஆதவன், நான்காம் வகுப்பு, கொ.மே.மேனிலைப் பள்ளி, பெருந்துறை
1215. எஸ். பூர்ணிமா, எம்பசோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வாணியம்பாடி
1216. கோ.நித்யாஸ்ரீ, முதல் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் மே.நி.பள்ளி, ஊத்தங்கரை
1217. மோ. பிரியங்கா, பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, சிவலிங்காபுரம்
1218. பழ.இலக்கியா, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ மாணிக்கம் மெட்ரிகுலேஷன் மே.நி.பள்ளி, விராச்சிலை
1219. ஜே. ப்ரியாலட்சுமி, ஐந்தாம் வகுப்பு, வீனஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்
1220. எஸ்.கிருத்திகா, பத்தாம் வகுப்பு, ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் மேல்நிலைப் பள்ளி, திருப்பனந்தாள்
1221. எஸ்.ஆர்த்திகா, ஆறாம் வகுப்பு, ஸ்ரீ குமரகுருபர



சுவாமிகள் நடுநிலைப் பள்ளி, திருப்பனந்தாள்
1222. செ. கிருபளானி, எட்டாம் வகுப்பு, கேந்திரிய வித்யாலயா, கல்பாக்கம்
1223. பி. ராகினி, நான்காம் வகுப்பு, வி.வி.என்.கே.எம்.பள்ளி, வேலூர்
1224. சு.கீர்த்தி, பதினொன்றாம் வகுப்பு, தூய இஞ்ஞாசியார் மே.நி.பள்ளி, பாளையங்கோட்டை
1225. ஜி.ஸ்ரீவர்ஷிணி, ஆறாம் வகுப்பு, எஸ்.ஆர்.ஜி.டி. எஸ்.மே.நி.பள்ளி, திருவண்ணாமலை
1226. பே. பத்மசெல்வி, நான்காம் வகுப்பு, தூய தாமஸ் தொடக்கப்பள்ளி, தூத்துக்குடி



1227. எஸ். நிவேதா, ஐந்தாம் வகுப்பு, அசோகா மெட்ரிகுலேஷன் பள்ளி, மன்னார்குடி
1228. மூ. ரிதன்யா, எட்டாம் வகுப்பு, எஸ்.எஸ்.வி.மெட்ரிக் மே.நி.பள்ளி, சிவகிரி
1229. சு. சரண்யா, ஆறாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ண சிதம்பரேஸ்வரர் மே.நி.பள்ளி, தேரியூர்
1230. பி.ஷாலினி, ஐந்தாம் வகுப்பு, குப்பாண்ட கவுண்டர் ஆரம்பப்பள்ளி, பொள்ளாச்சி
1231. அ.ஸ்ரீராம், மூன்றாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், ஓசூர்
1232. எம். பரணிதரன், மூன்றாம் ஆம் வகுப்பு, எஸ்.எஸ்.வி. நர்ஸரி மற்றும் துவக்கப் பள்ளி, கொடுமுடி
1233. டி.ஜான்பால், பன்னிரண்டாம் வகுப்பு, ஆர்.வி.அரசு ஆண்கள் மே.நி.பள்ளி, ஓசூர்
1234. சே.பிரபாகரன், பத்தாம் வகுப்பு, அறிஞர் அண்ணா அரசு மே.நி.பள்ளி, திருப்பூர்
1235. ஹெச்.ஒய்.கௌரவ், ஏழாம் வகுப்பு, யுனைடெட் அகாடமி, ஹாசன்
1236. எஸ்.எஸ்.ஹவுசிக் மணி, முதல் வகுப்பு, ஸ்ரீமதி ராம்குவண் தேவி ஃபோம்ரா விவேகானந்தா வித்யாலயா, சென்னை
1237. என். தருண், ஏழாம் வகுப்பு, இன்டர்நேஷனல் ஸ்கூல், பெங்களூரு
1238. பி.ஷஷாங்க், மூன்றாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், சென்னை
1239. பா. நவீன்குமார், ஒன்பதாம் வகுப்பு, சைனிக் பள்ளி, வேலூர்
1240. பெ. சண்முகம், ஒன்பதாம் வகுப்பு, சங்கர் மே.நி.பள்ளி, சங்கர் நகர்
1241. க. சூர்யராஜ், ஏழாம் வகுப்பு, மீனாட்சி அம்மன் மெட்ரிக் மே.நி.பள்ளி, உத்திரமேரூர்
1242. ஐ.ரா.சுப்ரமணியன், ஆறாம் வகுப்பு, சவேரியார் மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி
1243. வி. சரண், பன்னிரண்டாம் வகுப்பு, மாநகராட்சி ஆண்கள் மே.நி.பள்ளி, சென்னை

கோகுலம் சிறுவர் சங்கம் - கூபபன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!


1244. த.சு.மோகன்ராஜ், பத்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் மே.நி.பள்ளி, கோபி

1245. எம்.சிவா, பதினொன்றாம் வகுப்பு, ஆர்.வி.அரசு ஆண்கள் மே.நி.பள்ளி, ஓசூர்

1246. பி. நவநீத பிரபு, பன்னிரண்டாம் வகுப்பு, ஆர்.வி. அரசு ஆண்கள் மே.நி.பள்ளி, கோபி

1247. சி.அர்ஜூன், ஆறாம் வகுப்பு, எடிசன் பள்ளி, மணலூர்

1248. மு.ஹரிபிரசாத், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்




1249. மு. நாகார்ஜூன், ஏழாம் வகுப்பு, யு.ஆர்.சி. பழனியம்மாள் மெட்ரிக் மே.நி.பள்ளி, ஈரோடு

1250.ஆ.வ.ராம் அரவிந்த், ஒன்பதாம் வகுப்பு, விவேகானந்தா கேந்திர வித்யாலயா, கன்யாகுமரி

கதையின் கதை!



நடராஜன்,
பத்தாம் வகுப்பு,
உ.எண்:762,
அரசு மேனிலைப்பள்ளி,
புள்ளமங்கலம்.



சருகு

நிஜவான் என்றொரு குரு. அவர் ஆசிரமம் அமைத்துப் பல சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். பஹுவசாலி என்ற மன்னன் தனது இரு குமாரர்களையும் அவரிடம் கல்வி பயில அனுப்பி வைத்தான். பல காலம் கற்று முடிந்ததும் அரச குமாரர்கள் குருவை வணங்கி ''குருவே, தங்களுக்கு குருதட்சணையாக என்ன தர வேண்டும்? என்றனர். சிறிது நேரம் யோசித்த நிஜவான், ''உபயோகமற்ற சருகுகளை ஆளுக்கு ஒரு பையில் அள்ளி வாருங்கள். அது போதும்'' என்றார்.

இளைஞர்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தேகமாகப் பார்ப்பதைக் கண்ட குரு, 'ஆம், மன்னர் கொழுந்துகளே. எனக்கு ஒரு பை நிறைய சருகு போதும். அதுவே குருதட்சணை. சென்று வாருங்கள்' என ஆசி கூறி அனுப்பி வைத்தார்.

இரு அரச குமார்களும் காட்டில் நுழையும்பொழுதே அங்கு குவியல் குவியலாகச் சருகுகள் அள்ளப்பட்டுக் கிடப்பதைக் கண்டனர். அதன் அருகே சென்றபோது, அவர்களை எதிர்கொண்டான் ஒரு விவசாயி. ''குழந்தைகளே, நான்தான் இந்தச் சருகுகளை இங்கே குவித்துக் கொண்டிருக்கிறேன். இவற்றை எடுத்துச் சென்று மக்க

வி.ஜெயலெஷ்மி

நிலத்தில் மேற்கொள்ளும் பயணத்தைவிட, மிகவும் உற்சாகமும் ஆபத்தும் நிரம்பியது கடல் பயணம். சுற்றிலும் நீண்டு பரந்த நீர்ப்பரப்பும், அலை வேகமும், காற்றின் சுழற்சியும், கடலில் வாழும் உயிரினங்களின் துள்ளாட்டமுமாக வசீகரப்படுத்துவது இந்தப் பயணம். அப்படியொரு பயணத்தை மேற்கொண்டான் 'ராபின்சன் குருசோ' என்னும் இளைஞன். அந்தப் பயணத்தில் அவன் கப்பல் உடைந்து, ஒரு தீவில் கரை ஒதுங்கினான்; பிறகு அங்கிருந்து எப்படி மீண்டான் என்பதுதான், 'டேனியல் டி∴போ' எழுதிய 'ராபின்சன் குருசோ' என்கிற நாவலின் உள்ளடக்கம்.

ஆனால், அந்த நாவலுக்கான வாழ்க்கையை - கருவை - அளித்தவர், 'அலெக்ஸாண்டர் ஸெல்கிர்க்' என்னும் ஸ்காட்லாந்து நாட்டுக்காரர். 1676 ஆம் ஆண்டு பிறந்த ஸெல்கிர்க், ஒரு சமயம் கப்பலில் பயணம் மேற்கொண்டிருந்தார். 'வைட்டமின் சி' குறைபாடால் ஏற்படும் 'ஸ்கர்வி' என்ற நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படாத காலம் அது. அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் பொருட்டு, கப்பலின் கேப்டனுடன் இவருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

அந்தக் கப்பலின் கேப்டனான வில்லியம் டேம்பியர் கடுமையான சுபாவமுடையவர். அவருடன் ஒத்துப் போகாததால், மனிதர்களே இல்லாத ∴பெர்னாண்டஸ் தீவில், 1704 ஆம் ஆண்டு ஸெல்கிர்க் இறக்கி விடப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்கு மேல் மனிதர்கள் இல்லாத அந்தத் தீவில் வாழ்ந்த ஸெல்கிர்க்கை 1709 ஆம் ஆண்டு 'டியூக்' என்னும் கப்பலின் கேப்டனான 'வுட்ஸ் ரோக்கர்ஸ்' என்பவர் காப்பாற்றி அவரது சொந்த நாடான ஸ்காட்லாந்து நாட்டில் கரை சேர்த்தார். ஸெல்கிர்க்குக்கு ஏற்பட்ட அனுபவங்கள், 'தி இங்கிலீஷ் மேன்' என்ற பெயரில் 'ரிச்சர்ட் ஸ்டீல்' என்பவரால் முதலில் எழுதப்பட்டு வெளியாயின. அதுதான் பிற்காலத்தில், 'ராபின்சன் குருசோ' உருவாகக் காரணமானது.

ஸ்காட்லாந்தில் உள்ள - 'ஸெல்கிர்க்' பிறந்த ஊரான 'லார்கோ'வில், அவருக்கு முழு உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது.




வைத்தோ அல்லது எரித்துச் சாம்பல் சத்தாக்கியோ, பயிர்களுக்குப் போடுவேன். அது சரி, நீங்கள் யார்?'' என்றான்.

அதைக் கேட்ட தம்பி, ''அண்ணா... குரு, உபயோகமற்ற சருகுகள்தானே ஒரு பை கேட்டார். இந்தச் சருகுகள் பயனுள்ளவையாகவல்லவோ இருக்கின்றன? வா... வேறு இடத்தில் தேடலாம்'' - என்றான் மெல்லிய குரலில்!

விவசாயியிடம் காட்டைச் சுற்றிப் பார்ப்பதற்கு வந்துள்ளதாகக் கூறி இருவரும் அங்கிருந்து நகர்ந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் சில பெண்கள் சருகுகளைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். ''இவற்றை நீரில் ஊற வைத்து, தைத்து, சாப்பிடும் இலையாக்குவோம். மீதியை காய்ந்ததும் அடுப்பெரிக்கப் பயன்படுத்துவோம்'' என்றனர் அந்தப் பெண்கள். அரச குமாரர்களிடம் சற்றே ஏமாற்றம் தலை தூக்கியது.

விடா முயற்சியுடன் மேலும் சென்றனர். ஒரு மரத்தடியில் சருகுகள் கிடப்பதைக் கண்டனர். அந்த தருணத்தில் பல பறவைகள் பறந்து வந்து, சருகுகளை தம் அலகால் கொத்தி மரத்தின் மேலே கூடு



கட்டுவதற்காக எடுத்துச் செல்வதைப் பார்த்தனர்.

"தம்பி... உபயோகமற்ற சருகுகளே கிடைக்காது போலிருக்கிறதே... என்ன செய்யலாம்?" என்றான் அண்ணன்.

"அண்ணா... நம்பிக்கை இழக்காதே. முயற்சிப்போம்... வா..." என்றான் தம்பி.

பேசியபடியே இருவரும் முன்னேறினர். வழியில் ஒரு ஓடை வந்தது. ஓடை நீரில் பல சருகுகள் மிதந்து கொண்டிருந்தன.

"நிச்சயமாக இவை யாருக்கும் உபயோகப்பட முடியாதவையாகத்தான் இருக்கும். இவற்றைப் பையில் அள்ளிப் போடலாம்" என்று உறுதிப் படுத்திக் கொண்ட இரு ராஜகுமார்களும், ஓடையினருகே சென்று குனிந்தனர். அந்தச் சருகுகளின் மேல் கூட்டம் கூட்டமாக எறும்புகள் ஏறி அமர்ந்திருப்பதைக் கண்ணுற்றனர். அந்த சருகுகளில் சென்று, கரையை அடைய அவை முயற்சித்துக் கொண்டிருந்தன. உபயோகமற்ற சருகுகளே கிடைக்காத நிலையில் மாலையில் ஆசிரமம் திரும்பினர் அவ்விளைஞர்கள்.

"குருவே, சருகு என்றவுடன் சாதாரணமாக எண்ணி விட்டோம். உபயோகமற்ற சருகே இல்லை என்பதைப் புரிந்துகொண்டும் விட்டோம். எங்களை மன்னியுங்கள். தாங்கள் கேட்ட குருதட்சணையை எங்களால் தர இயலவில்லை" என வருத்தத்துடன் தெரிவித்தனர்.

"நீங்கள்தான் கொடுத்து விட்டீர்களே" என்றார் குரு.

ராஜகுமாரர்கள் விழித்தனர். குரு தொடர்ந்து "உபயோகமற்றது என்று எதுவும் இல்லை எனப் புரிந்து கொண்டீர்களல்லவா? உங்களுக்குக் கிடைத்த அந்த அறிவுதான் நீங்கள் எனக்குத் தரும் காணிக்கை. மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள்' என்று ஆசி கூறி, அவர்களை அனுப்பி வைத்தார். ○



1947 ஆகஸ்ட் 14ஆம் தேதிக்கு முன்பு வரை இந்தியா என்ற ஒரே நாடாக இருந்த பகுதி. பிரிந்து புதிய நாடு உருவானது. பெயர்: பாகிஸ்தான். பாகிஸ் தான் 1971அம் ஆண்டில், மேலும் ஒரு பிரிவினையைச் சந்தித்தது. கிழக்குப் பாகிஸ்தான், பங்களாதேஷ் என்று புதிய பெயர் பெற்றது. இது நமக்குத் தெரியும்.

ஆனால், கடந்த 1990க்குப் பிறகு புதியதாகத் தோன்றிய 32 நாடு களில் பெரும்பாலான நாடுகள் சோவியத் யூனியன், யூகோஸ் லாவியா ஆகிய இரண்டு நாடுகளிலி ருந்து பிரிந்து, உருவானவைதான். 1991ல், சோவியத் யூனியனில் பல் லாண்டுகளாக இருந்து வந்த நாடுகள்

வரலாறு

பழைய உலகம்; புதிய தேசங்கள்!

உலகம் முழுவதுமாக 32 புதிய நாடுகள் தோன்றி இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை பற்றி சுருக்கமாக நாம் தெரிந்துகொள்ளலாமா?

அந்தக் கூட்டமைப்பிலிருந்து விலகி, சுதந்திரமாக செயல்பட முடிவெடுத்தன. அதன்படி சோவியத் ரஷ்யக் கூட்ட மைப்பு சிதறுண்டது. அதன் உறுப்பு

கௌதம்ராம்



* உக்ரைன்

நாடுகள் தனி நாடுகளாக இயங்க ஆரம்பித்தன. இப்படிப் பிரிந்த நாடுகள் உக்ரைன், பெலாரஸ், அதனைத் தொடர்ந்து ஆர்மேனியா, அஜர்பைஜான், எஸ்தேனியா, ஜியார்ஜியா, கஜகஸ்தான், கையர்ஜிஸ்தான், லாத்வியா, மோல்டோவா, தஜிகிஸ்தான், துருக்மனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவை. பிரிவுக்குப் பின்னரும் முந்தைய நிலப்பரப்பில் சுமார் 75% சதவீதம் ரஷ்யாவின் கைவசம் உள்ளது என்பதும், பிரிந்து சென்ற நாடுகள் அனைத்துமே ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது நிலப்பரப்பில் சிறியவை; மக்கள் தொகையிலும், தொழில் வளர்ச்சியிலும் குறைந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென் மேற்கு ஆப்பிக்கா என்ற ஜெர்மனிய காலனி, தென் ஆப்பிரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனை எதிர்த்து 'தென் மேற்கு ஆப்பிரிக்கா மக்கள் அமைப்பு' என்ற இயக்கம் சுதந்திரம் கோரி கொரில்லாப் போர் நடத்தத் துவங்கியது. போராளிகள் தங்கள் நாட்டுக்கு நமீபியா என்று புதிய பெயரைச் சூட்டினார்கள். 1988ல் ஐ.நா. சபையின் அமைதி ஒப்பந்த நடவடிக்கையின் பலனாக சுதந்திரப் போராட்டம் முடிவுக்கு வந்தது. நமீபியா என்ற நாடு உருவானது.

1871 முதல் ஒரே நாடாக இருந்த ஜெர்மனி, இரண்டாம் உலகப் போரின் முடிவில் கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று இரண்டு நாடுகளாகப் பிரிந்தது. இரு நாடுகளுக்கும் இடையில் பெரிய சுவர் எழுந்தது. 1990ல், இரண்டு ஜெர்மனிகளும் இணைந்து ஒரே நாடாயின. ஜெர்மனியைப் போலவே, அராபிய தீபகற்ப பகுதியில் தனித்தனியாக இருந்த வடக்கு ஏமன், தெற்கு ஏமன் இரு நாடுகளும் 1990ல் ஐக்கிய ஏமன் குடியரசு ஆயின.


இந்தோனேசியாவை ஒட்டி அமைந்த தீவு கிழக்குத் தைமூர். இது சுமார் 450 ஆண்டுகள் போர்ச்சுகீசியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1975ல், போர்ச்சுகீசியர்களிடமிருந்து விடுதலை பெற்றாலும், அதனையடுத்து இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டில் இருக்க நேரிட்டது. 2002ல் கிழக்கு தைமூர் சுதந்திர நாடானது. தற்போது கிழக்கு தைமூர் ஜனநாயகக் குடியரசு என அழைக்கப்படுகிறது.

64% செக் மக்களும், 31% ஸ்லோ




◆ பங்களாதேஷ்

◆ போஸ்னியா



வாகிய மக்களும் 'இரு தரப்பினருக்கும் சம உரிமை' என்ற அடிப்படையில் இணைய முடிவு செய்ததன் காரணமாக செக்கோஸ்லோவேகியா சோஷலிஸ்ட் குடியரசு என்ற நாடு 1969ல் உருவானது. 1990ல், நாட்டின் பெயரில் இருந்த 'சோஷலிஸ்ட்' என்பதை எடுத்துவிட்டு, செக் மற்றும் ஸ்லோவகிய குடியரசு



* வடகொரியா

கூட்டமைப்பு என்று பெயரிடப்பட்ட போது, பாரம்பரிய கம்யூனிச கோட்பாடுகளிலிருந்து விலகுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் உண்டான பிரச்னை வளர்ந்து விஸ்வரூபம் எடுத்தது. அதன் விளைவாக 1992ல் செக்கோஸ்லோவேகியா என்ற ஒரே நாடு, செக் மற்றும் ஸ்லோவாகியா என்று மீண்டும் இரு நாடுகளாக மாறியது.

1918ஆம் ஆண்டில் செர்பியர்கள், குரோட்கள், ஸ்லோவெனியர்கள் ஆகியோரைக் கொண்ட நாடாக ஒன்றுபட்டு விளங்கிய நாடு யூகோஸ்லேவியா. அது இரண்டாம் உலகப்போரின்போது நாஜிப் படைகளால் பிடிக்கப்பட்டது. 1945ல், மார்ஷல் டிட்டோவின் தலைமையிலான குழு, யூகோஸ்லேவியாவை தன்



* ஸ்லோவேனியா

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. ஆனால் 1990ல் உள்நாட்டுப் போர் தொடங்கியது. அதன் பலனாக ஒன்றுபட்ட யூகோஸ்லேவியாவின் அங்கமாக இருந்த ஸ்லோவேனியா, குரோசியா, மாசிடோனியா ஆகிய பகுதிகள் 1991ல் தங்களை சுதந்திர நாடுகளாக அறிவித்துக் கொண்டன.

அதேபோல 1992ல் போஸ்னியாவும், ஹெர்சேகோவினாவும் சுதந்திர நாடுகளாக தங்களை அறிவித்துக்கொண்டன. அதனைத் தொடர்ந்து உள்நாட்டுக் குழப்பமும், சண்டையும் நடந்தன. இதனால் அந்தப் பிராந்தியத்திலேயே அமைதியற்ற ஒரு சூழ்நிலை நிலவியது. 2006ல் செர்பியா தனி நாடானது. அதிலிருந்து பிரிந்து 2008ல் கொசோவா தனி நாடு அறிவிப்பை வெளியிட்டது. இப்படியாக 1990-ல் தொடங்கி ஒரு தேசமாக இருந்த யூகோஸ்லேவியாவிலிருந்து 2008 வரையிலான கால கட்டத்தில் ஆறு தனி நாடுகள் உருவாயின.

இப்படியாக உலக வரைபடம் கடந்த கால் நூற்றாண்டில் பலவிதமான எல்லை மாறுதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது. ●



உழைப்பால்

‘‘அம்மா இன்று இரைதேட
அழகாய் நானே பறந்திடுவேன்
வம்பு ஏதும் செய்யாமல்
வாழ்த்துச் சொல்லி
அனுப்பிடுவாய்’’

தனது கருத்தை அன்னையிடம்
தயங்கி சொன்னது சிறுகுஞ்சு.
அகம் குளிர்ந்த தாய் காக்கை
அனுமதி தந்தேன் என்றதுவே.

மு. நடராசன்

கதைப்பாடல்

உயரே குஞ்சு பறந்ததுவே.
உணவைத் தேடி அலைந்ததுவே.
கடையில் வடையைப் பார்த்ததுமே
களிப்பு மனதில் கொண்டதுவே...

கரிய மூக்கை நீட்டியுமே
கவ்விக் கொண்டது வடையதனை,
சத்தம் போட்டுத் துரத்தியதும்
சட்டென உயரே பறந்ததுவே.

அன்னையை நாடிய சிறுகுஞ்சு
அடைந்த வடையைத் தந்ததுவாம்!
இரையைக் கவர்ந்த கதை தன்னை
இரைச்சலாகப் பகர்ந்ததுவாம்.

பெறவேண்டும்!



''திருடி வந்து உண்ணுவது
தீது; மேலும் ஆபத்து!
நமக்குத் தேவை என்றாலும்
நமது உழைப்பால் பெற வேணும்!''

அன்னை கடிந்து சொன்னவுடன்,
அருமை பிள்ளை உணர்ந்துவாம்.
உண்மை வழியில் நடப்பதென
உறுதி நெஞ்சில் கொண்டதுவே!



அலைகடலின்

கார்த்திகா

கடல்வாழ் உயிரினங்களைக் கூறு' என்று கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்? உடனடி பதில், மீன்கள். அப்புறம் ஆமைகள், கடல்வாழ் தாவரங்கள். இவை போன்ற கடல்வாழ் உயிரினங்களில் மூன்றில் ஒரு பகுதி பவழத் திட்டுகள் நிறைந்த பகுதிகளில் வசிக்கின்றன, தெரியுமா? பவழமும் ஒரு கடல் வாழ் உயிரினம்தான்.

பூமத்திய ரேகையைச் சார்ந்த கடல் பகுதிகளில்தான் இவை பெரும்பாலும் காணப்படுகின்றன. தெற்கு அட்லாண்டிக் தவிர ஏனைய பெருங்கடல்கள் இவ்வளத்தைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் மன்னார் வளைகுடா, கட்ச் வளைகுடா, லட்சத்தீவு, அந்தமான் நிகோபார் தீவுகள் போன்ற இடங்களில் இவை காணப்படுகின்றன.

இந்தப் பவழம் ஒரு புலால் உண்ணும் உயிரினம். பாறை போல் தோற்றமளிக்கும் ஓர் அமைப்பில் ஆயிரக் கணக்கிலான பவழங்கள் இணைந்திருக்கும். இந்தப் பாறை போன்ற அமைப்பு கால்சியம் கார்பனேட் அடுக்குகளால் ஆனது. இந்தப் பவழப் பாறைகளைச் சார்ந்து மீன்கள், மெல்லுடலிகள், கடின ஓடுகளை உடைய ஆமை, நண்டு போன்ற உயிரினங்கள் வாழ்கின்றன. இந்தப் பவழங்களுக்கு உணவாவதும் சிறிய மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள்தான்.

உலகெங்கும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பவழங்களின் வகைகள் மட்டும் 2600.சூரிய ஒளி பிரதிபலிக்கப்படும் 60 மீ ஆழத்திலிருந்து ஏறத்தாழ 3000 மீ ஆழம் வரை இந்தப் பல்வேறு வகையான பவழங்கள் வாழ்கின்றன. இவற்றைச் சார்ந்து சுமார் 4000 கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை அமைகிறது.

அப்படி என்ன சிறப்பு இந்தப் பவழப் பாறைகளில்? கடல்வாழ் உயிரி







ணங்களுக்கு ஏற்ற உணவாக அமைவ தோடு வசிப்பிடமாகவும் விளங்குகின் றன. பவழங்கள் அணிகலன்கள் செய் யவும், கலைப் பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றன. இதயநோய், நுரை யீரல் தொடர்பான நோய்கள், எலும் புருக்கி நோய், இரத்தப் புற்றுநோய் போன்றவற்றுக்குரிய மருந்து உற் பத்தியில் முக்கியப் பங்கு பெறுகின் றன.

இவ்வளவு பயன்களைத் தரும் பவழங்கள் மெல்ல அழிந்து வரு கின்றன என்பது வேதனைக்குரிய செய்தி. மீன் பிடிக்கத் தெளிக்கப்படும் நச்சுப் பொருட்களாலும், வெடி வெடித்து மீன் பிடிப்பதாலும் பவழப் பாறைகள் சிதைவுறுகின்றன. தொழிற் சாலைக் கழிவுகள், கப்பல் போக்குவரத் தால் கடலில் சேரும் எண்ணெய்க் கழி வுகள், கடலுக்கடியில் நிகழ்த்தப்படும் அணு வெடிச் சோதனைகள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் ஆழ்கடலின் அஸ்திவாரமான பவழங்களின் அழிவுக் குக் காரணமாகின்றன. புவி வெப்ப மடைவதும், கடல்நீர் சூடாவதும் பவழங்களை நிறமிழக்கச் செய்து, அவற்றின் தன்மையை மாற்றுகின் றன.

சுற்றுச் சூழலுக்கும், அதன் மூலம் அவற்றைச் சார்ந்து வாழும் மனித குலத் துக்கும் நன்மையைத் தருபவை இந்தப் பவழப் பாறைகள். அவ்வளத்தைக் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கும் பயன்படச் செய்வது நமது கடமை தானே?



அஸ்திவாரம்!






என்ன தவம் செய்தனை?

கதை : ராகுல்

குழந்தைக் கடவுள்கள் - 11

படம் : சொக்கலிங்கம்






கிருஷ்ணன் நமக்குக் குலதெய்வம். நீ கேளு; நடக்கும்.
சரிம்மா.
ஊத்துக்காடு கிருஷ்ணன் சந்நிதி...
கிருஷ்ணா, நீயே எனக்கு குருவாக இருந்து கற்றுக் கொடு!
கண்மூடி தியானத்தில் ஆழ்கிறார். ஒருநாள்...
கிருஷ்ணா... கிருஷ்ணா....
மடியில் யாரோ அமரும் உணர்வு...
கண்ணைத் திறந்து பார்க்க...
யார் இந்தக் குழந்தை? இவ்வளவு அழுக்காய் இருப்பதேன்?
மென்மையாய்...
போய் விளையாடு...
மீண்டும் கண்களை மூட....
குழந்தை மீண்டும் அமர...
கண் விழித்து....
இதென்ன தொல்லை, தியானிக்க முடியாமல்? யார் இது?
அந்தப் பக்கமா போய் விளையாடு, போ...
குழந்தை தயங்கியபடியே செல்ல...



கண்களை மூடியவுடன்...
இதற்கு முன் இந்தக் குழந்தையைப் பார்த்ததே இல்லையே? திடீரென்று எங்கிருந்து வந்தது?
கண் திறந்து பார்க்க...
அதென்ன மயில் பீலி... அரைஞாண்... சலங்கை...
வேகமாய் எழுந்து...
வாசல் பக்கம் வர...
யாருமில்லையே? வந்தது கிருஷ்ணனா? யசோதை பாலனா?
உள்ளே திரும்பி, பாட ஆரம்பிக்கிறார்.
என்ன தவம் செய்தனை யசோதா...
தன்னை மறந்து பாடுகிறார்.
கண்ணன் குழலோசை கேட்க...
அலை பாயுதே கண்ணா... என் மனம் அலை பாயுதே...
கண்ணன் காட்சியளிக்க...
பால் வடியும் முகம் நினைந்து நினைந்து...
வெங்கடசுப்பையரைப் பாடவைத்து மகிழ்ந்த கண்ணன், இன்றும் ஊத்துக்காட்டில் தரிசனம் தந்து கொண்டிருக்கிறான்.

சிரிப்பலை




நில்...





கவனி...



சிரி..!

உயர்ந்திடு



தம்பி தம்பி புறப்படு
நல்ல தம்பி புறப்படு
பள்ளிக்கூடம் புறப்படு
பாங்காய் பாடம் படித்திடு

அறிவில் சிறந்து விளங்கிடு
அன்பாய் என்றும் பழகிடு
உடலுக்கு உறுதியைக்
கொடுத்திடு
உள்ளத்தில் ஒளி ஏற்றிடு

உழைப்பை என்றும் மதித்திடு
உயர்ந்த செயலைச் செய்திடு

முருங்கை!



வீட்டில் உள்ள முருங்கை மரம்
வீசும் காற்றில் தலையாட்டும்
வலிமை அளிக்கும் கீரை தரும்;
வயிற்றின் நலத்தை காத்து வரும்.

எட்டிப் பறிக்கும் உயரத்தில்
எழிலூற ஆடும் காய்களுமே!
பட்டை இலை, பூ காயென்று
பார்க்கும் அனைத்தும் பலன் நல்கும்.

முருங்கை பட்டை மருந்தாகும்;
முருங்கைப் பூவும் ரசமாகும்;
முருங்கையை வெட்டி நட்டாலோ
முளைக்கும் விரைவாய் பூமியிலே!

- கன்னிக்கோவில் ராஜா

தம்பி!

காசை கருத்தாய் சேர்த்திடு
கடவுளை நாளும் வணங்கிடு

பெற்றோர் சொல்லைக் கேட்டிடு
பெரியோர் தம்மை மதித்திடு
உண்மை பேசி வாழ்ந்து நீ
உலகம் போற்ற உயர்ந்திடு!

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உ.எண்.34,
பனிரெண்டாம் வகுப்பு,
சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
போடிநாயக்கனூர்

அலையும் பட்டம்

பட்டம் நல்ல பட்டமாம்!
காற்றைக் கிழிக்கும் பட்டமாம்!
வட்டம் போட்டு வானிலே
நடனம் ஆடும் பட்டமாம்!

போட்டி போடும் பட்டமாம்!
துள்ளிச் சீறும் பட்டமாம்!
ஆட்டம் போடும் பட்டமாம்!
தலையை ஆட்டும் பட்டமாம்!



அழகு வான
வீதியில்
ஆடும் பாம்பு
பட்டமாம்!

கழுகின் சிறகு போலவே
வானில் மிதக்கும் பட்டமாம்!

காற்றுக் குதிரை மீதிலே
பறக்கும் பட்டம் பாரடா!
ஆற்று வெள்ளம் போலவே
அலையும் பட்டம் பாரடா!




அலமாரி

***அதிசய இளவரசியும் அற்புத இளவரசனும்*- ஆசிரியர்: ஹேமமாலினி, வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், 7 (ப.எண்.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 600017, விலை ரூ.50/-**

குழந்தைக்ளுக்கான கதை எழுதுவது என்பது கடினமானது. அந்தக் கதைகளில் மனிதர்கள் மட்டுமல்ல; விலங்குகள், பறவைகள், ஊர்வன... என்று அனைத்துயிரும் உயர்ந்த விஷயங்களைப் பேசும்; செய்யும். அதன்மூலம் எல்லா உயிரினங்களைப் பற்றியும், அவற்றின் தன்மை பற்றியும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு குழந்தைகளுக்கு ஏற்படும். அப்படியொரு முயற்சியை ஒரு ராஜா ராணிக் கதையின் மூலம் அழகாக எளிய நடையில் செய்திருக்கிறார் ஆசிரியர்.

***எகிப்திய நாகரிகம்*- ஆசிரியர் எஸ்.எல்.வி.மூர்த்தி, வெளியீடு: ப்ராடிஜி, நியூஹாரிசன் மீடியா பிரைவேட் லிமிடெட், எண். 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018. விலை ரூ.25/-**

'நைல் ஆற்றின் நன்கொடை' என்று கொண்டாடப்படும் எகிப்து நாகரிகத்தின் தொன்மை அங்குள்ள பிரமிடுகள், அதன் சிறப்பு, அங்குள்ள மக்களின் நம்பிக்கைகள், வழிபாடுகள், கலாசாரம், அறிஞர்கள்... என்று அழகான அறிமுகத்தை தருகிறது இந்த நூல். குறிப்பாக, 'ஸ்பிங்ஸ்' என்று சொல்லி வணங்கப்படுவது, நம் ஊரில் நாம் வணங்கும் அய்யனார், முனிஸ்வரன் போன்று ஓர் எல்லைச் சாமிதான்... போன்ற சின்னச் சின்ன செய்திகள் சுவாரஸ்யம். மாணவர்களுக்கு உபயோகமான நூல்!



***நல்வழி* ஆசிரியர்: சுவாமி ராகவேசானந்தர்,. வெளியீடு: ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை - 4, விலை ரூ.20/-**

குழந்தைகளின் அறிவு வளர்ச்சி எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு மனவளர்ச்சியும் மிக முக்கியம். அந்த மன வளர்ச்சியை பல்வேறு குட்டிக் கதைகள் மூலமாக விளக்கியுள்ளார் சுவாமிஜி. வெறும் ஆன்மிகக் கதைகள் மட்டுமல்ல; புகழ் பெற்றவர்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லி அதன் மூலம் குழந்தைகளைப் பண்படுத்துகிறார் சுவாமிஜி. பெரியவர்களும் படித்தறிய வேண்டிய புத்தகம்.





- ஆர்.எஸ்.ஆர்

எகிப்தின் எல்லைச்சாமி!

கடிதமாலை

● 'விளைந்த தங்கம்' அருமையான சிறுகதை. ராஜாவின் உழைப்பு, அவனுக்கு மேலும் வளத்தைத் தந்தது. எனவே, உழைப்பவர்கள் என்றும் தோற்றுப் போவதில்லை என்ற அரிய கருத்தை உணர்த்தியது. 'திருவுளச்சீட்டு' வேலனின் புத்திசாலித்தனம், தன்னையும் காப்பாற்றி, நிரபராதிகளையும் காப்பாற்றியது. - **வளர்மதி மனோதாஸ், லெக்ஷ்மிபுரம்** ● குழந்தையின் அழுகுரலை எண்ணி, சிவாஜி கோட்டையிலிருந்து வெளியேறிய வசுந்தரா படக்கதையில் ஒளிர்ந்தது தாய்மை! - **அ.விஜய்சாய் பாலா, திசையன்விளை** ●'நியூஸ் ரூம்!' பகுதியின் மூலமாக பலவகைப்பட்ட விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. - **பி. சர்வேஸ்வரன், உ. எண்: 456, மதுரை** ● வரம் பெற்று உயர்வோர் கூட 'கர்வம்' பெற்றால் 'பங்கம்' நிகழும் என்பதையும், பணிவே உயர்வு என்பதையும் 'மீன் தந்த வரம்' சிறுகதை அழகுற விளக்கியது! - **எல்.ஹரிபால சுப்ரமணியம், திருக்களூர்** ● பள்ளம் தோண்டத் தோண்டப் புதையல் கிடைக்கிறதே. அதுபோல கோகுலம் படிக்கப் படிக்க அறிவு மேன்மேலும் வளரும். **க.மோகன், மங்கலம்.**

ஒளிர்ந்தது தாய்மை!

●'ஸ்கூல் கலாட்டா!' பகுதியை படிக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. ஏனென்றால் நாமே அந்தச் சூழ்நிலையில் இருந்த மாதிரி ஒரு நினைவு வருகிறது. - **ஆர். அம்பிகா, அண்ணாநகர்** ● 'எங்கள் கதை' பகுதி மூலமாக ராக்கூன் என்கிற புதுமையான விலங்கைப் பற்றிப் பல வகையான செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. - **ஆர். பிருந்தா, மதுரை** ● 'தகவல்' பகுதியின் மூலமாகப் பல வகையான செய்திகளைப் பற்றி அறிய முடிந்தது. - **எஸ். வினீத் மாதவன், மதுரை** ●ஆகஸ்ட் பற்றிய அறிவுரையில் சரித்திரத்தில் நாம் சாதிக்க வழிகள் கிடைக்கக்கூடும் என்று கோகு கூறியது இனிமை. - **டி.எம்.விஸ்வதா, திண்டுக்கல்-1** ●அ...அ...ஆ...அச்... தும்மல் வருவதற்கான காரணங்களை படித்து தெளிவடைந்தேன். இப்போது எனக்கு தும்மல் போச்சு... - **உ.மதன்ராஜ், உ.எண்.614, வீரன்வயல்** ● எங்களைப் போன்ற மாணவ, மாணவிகளுக்கு மனதளவில் உற்சாகத்தை தரும் படங்கள், செய்திகள் தருவது கோகுலம்தான். - **இ. திவ்ய எபேசியா உ.எண்.1183, திருநெல்வேலி** ● ஆகஸ்ட் இதழில் வெளியான வசந்தரா, வளர்ச்சி, உன்னைத் தேடி வருவேன் - ஆகிய படக்கதைகளையும் படித்து ரசித்தேன். - **ஜி. பிரணவ், உறுப்பினர் எண். 424, திருச்சி**



விடையைச் சொல்; பரிசை வெல் - 27

1. 'மேஜிக் கியூப்'பை முதன்முதலில் கண்டுபிடித்தவர் ____________
2. 1093 கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர் ____________
3. ஜல்லிக்கட்டுக்குப் புகழ் பெற்ற ஊர் ____________
4. மிகப் பெரிய எரி நட்சத்திரக் கல்லின் பெயர் ____________
5. டால்ஃபின்கள் நீந்தும் வேகம் மணிக்கு ____________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி

பரிசு ரூபாய் 1000/-



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில் தான் உள்ளன. அவற்றைக் கண்டு பிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.9.2009

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்


1226

1227

1228

1229

1230

1231

1232

1233

1234

1235

1236

1237

1238

1239

1240

1241

1242

1243

1244

1245

1246

1247

1248

1249

1250

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 * Registered as a Newspaper in Srilanka